கலாசிந்தாமணி

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

புத்தகம்	பிங்களஹு ஐப்பசிமீ	ஸஞ்சிகை
3	அக்டோபர்மீ 1917	1

துதி

அத்துவித வத்துவைச் சொற்ப்ரகா சத்தனியை
யருமறைகண் முரசறையவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
வாதியை யநாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம்ம தம்பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கலநி ராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோமநிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ர பஞ்சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோமயத்தைச்
சிற்பரவெ ளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலிசெய்வாம்.

1917ஆ அக்டோபர்மீ

		குரு.	கே.
	3-சிம்-செ 12-துலா பு 15-தனு-சு 30-விரு-பு		ச. செ.
ரா.	சுக். ரவி.		புத.

பிங்களஆ ஐப்பசிமீ

உத்தராயணம் சரத்ருது	பசலி 1326 1327	சாலி 1840
கொல்லம் 1092.	கலியுகம் 5(19	ஹிஜரி 1335

கம.	டேமீ.	தமிழ் மீ.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், முதலியன.
சி	17	1	புத	பிர 5-31 சுவா 43-5, ரா 28-36 [0.
சி	18	2	வி	துவி 7-20, விசா 46-0, சேஷ 1-57, ரா 27-
சி	19	3	வெ	திரி 7-50, அநு 46-56, சேஷ 0-26. [11.
சி	20	4	சனி	சௌ 7-5, கேட் 46-59, தி 0-57. [ஸ்வதிபூ.
அ	21	5	ஞா	பஞ் 5-7 மூல 45-54, தி 6-37, ரா 12-56, சர
சி	22	6	திங்	ஷஷ் 2-3, ஸப் 55-9, பூரா 43-50, தி 9-4.
சி	23	7	செ	அஷ் 53-26, உத்தி 40-56, தி 2-52, ரா 21-45
சி	24	8	பு	நவ 48-0, திருவோ 37-27, ரா 17-54, ஆயு
சி	25	9	வி	தச 42-1, அவி 33-37 ரா 2 -28. [தபூஜை.
சி	26	10	வெ	ஏகா 36-9, சத 29-20, ரா 15-22.
ம	27	11	சனி	துவா 30-9, பூரட் 25-8, ரா 11-44.
அ	28	12	ஞா	திர 24-22, உத்திரட் 21-8, ரா 20-33, அமி.
சி	29	13	திங்	சதுர் 19-0, ரே 17-31, திதித்வயம்
சி	30	14	செ	O 14-13, அசு 14-29, தி 4-59, ரா 8-42.
சி	31	15	புத	பிர 10-13, பர 12-13, * கிருத்தி ரா 10-52.
ம	1	16	வி	துவி 7-8, கிரு 10-52, ரா 22-3.
ம	2	17	வெ	திரி 5-9, ரோ 10-36, தி 24-49.
சி	3	18	சனி	சௌ 4-23, மிரு 11-31, ரா 4-42, சித்தயோ
சி	4	19	ஞா	பஞ் 4-53, திரு 13-40, ரா 16-49.
அ	5	20	திங்	ஷஷ் 7-42, புன 17-2, ரா 9-57.
சி	6	21	செ	ஸப் 9-13. பூசம் 21-17, ரா 27-54, எதி-சா
சி	7	22	புத	அஷ் 13-18, ஆயி 27-4, சேஷத்யா 0-45.
அ	8	23	வி	நவ 18-39, மக 33-15, தி 0-9, ரா 27-3
சி	9	24	வெ	தச 24-0, பூர 39-50, ரா 30-21.
ம	10	25	சனி	ஏகா 29-17, உத்தி 46-16, சேஷத் 4-11.
அ	11	26	ஞா	துவா 34-11, ஹஸ் 52-14, தி 9 21.
சி	12	27	திங்	திர 38-17, சித் 57-22, தி 13-56, நரக சதுர்-
சி	13	28	செவ்	சதுர் 41-21, சுவா 60-0, தி 12-15 தீபாவளி
சி	14	29	புத	● 43-11, சுவா 1-12, தி 15-51, கேதாரவிர
சி	15	30	வி	பிர 43-43, விசா 4-0, தி 14-15.

மூன்றும் ஆண்டு

எல்லாம் வல்ல இறைவனின் திருவருட் சகாயத்தால் நமது சிந்தாமணியின் இரண்டாம் ஆண்டு இனிது நிறைவேறி இன்று மூன்றும் ஆண்டு உதயமாகித் தன்னை யேற்பார் கைக் கமலம் திகழ்கின்றது.

இம்முதற் சஞ்சிகையானது தன்னுடைய பழய நண்பர்களுக்கு ஆச்சரியத்தைத் தராமலிருக்க முடியாது. ஏனென்றால் கடந்த இருபத்துநான்கு மாதங்களாகத் திகழ்ந்து வந்த தன்னுருவம் யாதொரு முன்னறிக்கையு மின்றிச் சுருங்கியது கொண்டே. பேராசைப்பிண்டமான ஜர்மனியினுடைய இவ்வநீத யுத்தத்தின் காரணமாக நேரிட்ட காகித பஞ்சத்திற் சிக்குண்ட ஏனைய எண்ணிறந்த பத்திரிகைகளின் நிலைமையை இதுகாறும் அதற்கு வேறுய்யின்ற(அதாவது அளவிலும் பக்கங்களிலும் குறைவின்றியும் சந்தாவில ஏற்றமின்றியும் இருந்த)நமது சிந்தாமணியும் அடையாதிருக்கமுடிய விலலை. இவ்வாறு தன்னுருச் சுருங்கி வெளியாகுமென்று சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. இம்முதற் சஞ்சிகையில் வெளிப்படும் விஷயங்களெல்லாம் பழைய அளவிலேயே அச்சுக்கோத்து முடிந்து காகிதம் கிடைப்ப தரிதாய் விட்டதாலேயே இந்த அளவில் வெளிவரும்படி நேரிட்டது.

அளவில் குறைந்து காணப்பட்டாலும் முன் 32-பக்கங்களுக்கு இப்போது 40-பக்கங்களாக 8-பக்கங்கள் அதிகப்பட்டு விஷயங்களும் நிறைந்துள்ளன.

இந்த யுத்தம் நமது நேசக்கட்சிக்குச் சாதகமாக வெற்றியுடன் முடிந்து காகிதம் முதலியன சவுகரியப்பட்டு, நமது பத்திரிகை பழய அளவினதாகவும், வேண்டிய திருத்தங்களுடனும் முன்னைவிட பன்மடங்கு பிரகாசிக்கத் திருவருள் புரியுமாறு தனக்குவமை யில்லாதான் தாளிணை வேண்டுகின்றோம்.

நமது நேயர்கள் அளவினைக் கவனியாது கால நிலையையும், பக்கங்களும் விஷயங்களும் பெருகி யிருப்பதையும் உணர்ந்து மனச்சாந்தியடைந்து பத்திரிகையின் அபிவிருத்தியைக் கோருபவர்களாய் தத்தம்மா லியன்றவளவு புதிதாக சந்தா சேர்த்துக் கொடுத்து எமது முயற்சி முன்னிற்குமாறு உதவி புரிய வேண்டுமாய் பிரார்த்திக்கின்றோம்.

நமது பத்திரிகாபிமானிகளுக்கும் கைம்மாறு வேண்டாது விஷயதானஞ் செய்துவந்த கல்விமான்களுக்கும் மாற்றுப் பத்திரிகை யனுப்பிவந்த பத்திராதிபர்களுக்கும் எமது மனப்பூர்வகமான வந்தனம் உரிய தாகுக.

பத்திராசிரியர்.

கலாசிந்தாமணியின் மூன்றாவது ஆண்டு வாழ்த்து கவிகள்

நேரிசை ஆசிரியப்பா.

உயிரவை அளிப்பான் உயர்விசும் பாங்கண்
செயிரறும் எழுமாத் தனித்தேர் உகைப்போய்!
மாயிரு ஞாலம் மயங்குறச் சுருட்டும்
பாயிருள் பருகுபல் ஆயிரங் கதிரோய்!
காவளம் கவினிக் கைவளம் பழுனி
மாவளம் கெழுமிய மயிலையம் பதியிடை
மதிதொறும் எழுதலின் மதியோர் மகிழ்தர
வெய்யோனுதலின் விழுமியோர் வாழ்த்தலின்
பொய்யா உறுதிகள் புகட்டுன தொன்மைக்
கலையெட் டெட்டுக் கதிரோ னுதலின்
அலைநீர் அழுவம் ஆறவை நீந்திச்
சேணிலம்புகுதலின் செல்லிடம் விளக்கலின்
ஏணில வின்னிசை எண்டிசைப் பெறுதலின்
மன்னிய ஒளியோ னுதலின் மாந்தர்த்
துன்னிய அகவிருள் துமிப்போனுதலின்
படாஅத நடுநிலைப் பகலோ னுதலின்
எடாஅத மடமைக் கென்றூ ழாதலின்
வாய்மையிற் குன்றா வயங்கொளி ஞாயிறே!
ஒக்குமே எனைத்தான் ஒக்குமே நினைத்தான்
இக்கலா சிந்தா மணியெனும் செல்வன்!
ஆதலின் நிற்போல் அகலொளி பரப்பிக்
கோதறு பல்பொருள் குறைவற நிரப்பி
வாழியர் மன்னோ! வாழியர்
ஆழிசூழ் உலகின் அளவில ஆண்டே !!

திணை-பாடாண். துறை-பூவை நிலை.

மயிலை-சீனி. கோவிந்தராசன்.

மின்பொலியு நவமணியுள் வயிரமதே முதன்மையென விளங்கல்போல
மன்பதையுண்முதன்மையுறு மாணிக்க வேற்சுகுணமாண்போன்உள்ளீ
தன்புயர்த்திச் செயற்கரிய செய்வர்பெரி யோரெனச் சொற்றதனுக் [கேற்பக்
கொன்புனையுங்கலாசிந்தாமணித்தமிழைச் சென்னையினிற்குலவயாத்து.

கற்றவர்க்கு மற்றவர்க்கும் இன்றியமை யாதபெருங் களிப்பை யூட்டற்
குற்றனவாய் உவருலகிற் சிந்தாச்சிந் தாமணியா யுயர்பன் னூலின்
முற்றறிவாற் றிங்கடொறும் புதிதுபுதி தாய்விடுத்த முறையா லாண்டு
பெற்றியுடன் இரண்டேகி மூவாத மூவாண்டும் பிறந்த தாமால். 2

இத்தகைய சுயநலங்கொண் டொழுகாது பத்திரிகைக் கெளிய சந்தா
வைத்துதவிவருமவற்றால் வளர்ந்திலகு புண்ணியத்தின் வளர்ச்சிபோல
முத்தமிழின் சங்கமிசை முதலுறைந்த பிரானருளை முன்னிட் டிந்நூல்
எத்தலமும் புகழ்ந்துவக்க இனிதோங்கி யுகயுகமா யிசைந்து வாழி. 3

தென்காசி, ச. மாடசாமிப் பண்டாரம்.

சைவ சமய மேம்பாடு

தேவாரம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்,
வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீய தெல்லாம், அரன் நாமமே
சூழ்க, வையகமுந் துயர் தீர்கவே.

கோயிற் புராணம்

மழை வழங்குக! மன்னவன் ஓங்குக!
பிழையில்பல்வள னெல்லாம் பிறங்குக!
தழைக அஞ்செழுத் தோசை தரையெலாம்!
பழைய வைதிக சைவம்பரக்கவே!

அயனா், அரி, உருத்திர னென்னும் தலைவர்கள் மூவரையும் தம் விபூதிகளாகவிதித்து நிறுத்தி அவர் தம்மை அதிட்டித்து நின்று (அதிட்டித்தல்-நிலைக்களமாகக்கொண்டு செலுத்துதல்) சிருட்டி, திதி, சங்காரம் என்னும் மூன்றுதொழில்களையும் சங்கற்ப ரூப சந்நிதியானே இயற்றுநது இயற்றும் துரிய மூர்த்தியாகிய பரமசிவ னொருவனே சகல புவனங்களுக்கும் சர்வான்மாக்களுக்கும் பரமகாரணனை முழுமுதற்கடவுளாம்.

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும், பரமகாரணனுகிய அப் பரமசிவன் பக்குவான் மாக்கள் பலரும் ஓதித் தன்னுண்மைதேறி, இம்மை மறுமை இன்பங்களும், பரவீட்டின்பமும், தன்னருளால் முறையாக எய்திமேம்படுமாறு, சிருட்டி ஆரம்பத்தில் அருளிச்செய்த வேதாகமங்க ளிரண்டுமே மெய்யான முழுமுதல் நூல்களாம். அவ்வேதாகமங்க ளிரண்டும் அவ்வான்மாக்கள் பக்குவபேதங் கட்கு ஏற்ப நிறுத்திய பலகோடி சமயங்களுள்ளே, சிவசத்திநி பாதர்களாகிய உத்தமர்களுக்கு மெய்ஞ்ஞான சாதனங்கள் கடைப் பிடித்து உபதேசிக்கும் .வைதிக சைவமே அதீத சன்மார்க்கமாம். அவ் வைதிக சைவ சன்மார்க்கம் எடுத்துக்கூறும் முத்திமார்க்கங்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகையாம். பகுத்தறிதலின்றிச் சிவலிங்கமுதலிய திருமேனியே சிவ

மெனக் கண்டு அச்சிவபிரானை ஆண்டு வழிபடுமாறு போதிப்பது சரியை மார்க்கமாம்; சரியையாளர்களுக்குச் சிவபிரான் அங்கே வெளிப்படாது நின்று அருள்செய்வன். அருவப்பொருளாகிய சிவபிரான் ஈசானாதி மந்திரங்களால் சிவலிங்க முதலிய திருவுருக்கொண்டான் எனக்கருதிமந்திரநியாசத்தால் அச்சிவபிரானை ஆண்டு வழிபாடுமாறு போதிப்பது கிரியை மார்க்கம். (மந்திரநியாசம்-மந்திரத்தால் பதித்தல்) கிரியை யாளர்களுக்குச் சிவபிரான் கடைந்த பொழுது தோன்றும் அக்கினி போல அவ்வம் மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய் அவ்வத்திருமேனியில் அவ்வப்பொழுது தோன்றிநின்று அருள் செய்வன். யோகிகள் உள்ள மெங்கணும் இல்லமாக வாழுஞ் சிவபிரான் இச்சிவலிங்க முதலிய திருமேனியினுமிருந்து பூசை கொண்டருளுவன் எனக்கருதிச் சாத்திய மந்திரங்களால் அச்சிவபிரானை ஆண்டு வழிபடுமாறு போதிப்பது யோக மார்க்கமாம். யோகிகளுக்குச் சிவபிரான் கறந்த பொழுது தோன்றும் பால் போல அவ்வம்மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய், அவ்வத்திருமேனிகளில் அவ்வப்பொழுதுதோன்றி நின்று அருள் செய்வன். ஏகதேசமாகக் குறித்தலின்றி, அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபியாய் நீக்கமற நிறைந்து நிற்கும் சச்சிதானந்தப் பழம் பொருளான சிவபிரானை, அவன் திருவருட் பரஞானத்தால் வேறறக்கண்டு, அன்பு மிகுதியால் அச்சிவலிங்க முதலிய திருமேனிகளிலும் சிவனடியார் திருவேடங்களிலும், அகண்டாகாரமாகக் குறித்து, வழிபடுமாறு போதிப்பது ஞானமார்க்கமாம். ஞானிகளுக்குச் சிவபிரான் கன்றை நினைந்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால் போலக் கருணை மிகுதியினால் அவ்வன்பேதமாகி எப்பொழுதும் வெளிப்பட்டு நின்று, அங்கே அருள் செய்வன்.

உருத்திர கணங்களும், தேவர்களும், அகத்தியர், உபமன்னியர் முதலிய முனிவர்களும், ஆளுடைய பிள்ளையார், திருநாவுக்கரையர், நம்பியாரூரர், வாதவூரர் என்னும் பரமாசாரிய சுவாமிகள் நால்வரும், மற்றை நாயன்மார்களும், அரதத்தாசாரியர், பட்டினத்தார், மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர், தாயுமானர் முதலிய பரம ஞானிகளும் மற்றைச்

சிவஞான சுவாமிகளும், இந்தச் சமயாதீத சைவ சித்தாந்த சன்மார்க்கத்தின் வழி யொழுகியே, சிவசாலோகம், சிவசாமீபம், சிவசாரூபம், சிவசாயுச்சியம் என்னும் அபர முத்திகளும், பரமுத்தியும் பெற்றுய்ந்தார்கள். அவர்தாம் அந்நெறியால் வீடு பெற்றுய்ந்த வாற்றினை, வடமொழியிலும், தமிழிலும் உண்மை பல நூல்களால் நாம் அறிந்துய்ய வெளியிட்டருளினார்கள்.

ஆதலால், சைவ சமயத்திற் பிறந்த நமது அன்பர்களே! இத்துணைப் பெருஞ் சிறப்பினையுடைய நமது சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தின் மகிமை வரலாற்றை ஒரு சிறிதும் அறியாமல் பிறமதத்தினரது துர்ப்போதனைக்குட்பட்டு நம் சற்சமய நெறியைக் கைவிட்டுக் கேடுறாது, இனியேனும் பரம சிவ பாதார விந்த பத்தியில் நிலை நின்று உய்வீர்களாக.

"சைவ சமய மேசமயம்
 சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக்
 காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி
 புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
 சேர வாருஞ் சகத்தீரே"

"காக முறவு கலந்துண்ணக்
 கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
 பொங்கித் ததும்பிப் பூரணமா
ஏக வுருவாய்க் கிடக்குதையோ
 இன்புற் றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
 சேர வாருஞ் சகத்தீரே" —தாயுமானவர்.

சைவன்.

அறம்

"எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்,
யாதினு மரிதரிது காண்."

என்று ஸ்ரீ. தாயுமானசுவாமிக ளருளியபடி எப்பிறப்பி லும் மனிதப் பிறவியே மேன்மையுடையதாயும் அப்பிறப்பிற் பிறத்தல் மிகவும் அருமை ஆதலால் பிறத்தற்கரிய மானுடப் பிறப்பிற் பிறந்தவர்கள் தாம் இறந்தாலும் தம்பெயர் இறவாமல் நிலவுலகிலுலவும்படி புகழை நிலை நிறுத்தல் வேண்டும். புகழுடையாதவர் பிறப்பதிலும் பிறவாதிருத்தலே நலம்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று' (குறள்)

அத்தகைய புகழைத் தருவது அறம். என்னை?

'உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார் மேனிற்கும் புகழ்' (குறள்)

ஆதலின், அறம் செய்தவர்கள் புகழை நிலை நிறுத்துகிறார்கள். அவர்களே எடுத்தற்கரிய மனிதப்பிறவி எடுத்தவர்கள் அடைய வேண்டிய பயனையடைந்தவர்களாகின்றார். அவரே உலகத்தில் இறந்தும் இறவாதவ ராவர்.

2. அறமாவதென்னை? வேதங்களாலும் மநுமுதலிய நூல்களாலும் விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலுமே அறமெனப்படும். மண்ணுலகின் மானிடர்களா லடையக்கூடிய அறம், பொருள், இன்பம், வீடு,என்னும் நான்குவிதப் பெறும்பேறுகளிலும் தலையாயது அறம். அறம் ஒன்று கையுறின் ஏனைய மூன்றுபேறுகளும் தம்மிற்றாமே ஒன்றன் பின்னொன்றாய் இசைந்து கைகூட்டுவிக்கற் பாலது. "அறத்தினின்று பொருள் உண்டாகின்றது; அறத்தினின்று இன்பமும் உண்டாகின்றது; அறத்தினின்றே யாவும் உண்டாகின்றன. அறமானது இச்சகத்திற்கே சாரமாயிருக்கின்றது. எங்கெங்குஅறமானது வளர்ந்து பயனளிக்கும் பான்மையுடையதாக வர்கின்றதோ அங்கங்கே தான் காரணமாகிய அவ்வறமே அறம் பொருளின்பமென மூவடிவான காரியப் பொருள்களாய் பரிணமித்து நிற்கின்றது. அறமிருக்கு மிடத்தில் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றும் இருக்கு மென்பது திண்ணம்." என்றுவான்மீகி முனிவரு மருளியுள்ளார். புருஷார்த்தங்களை யெடுத்தோதப் புகுந்த திருவள்ளுவ நாயனாரும் தந்திருக் குறளின் கண்,

'சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங்
காக்கமெவனோ வுயிர்க்கு' என்றும்,
"அறத்தான் வருவதே யின்பமற்றெல்லாம்
புறத்த புகழுமில" என்றும் கூறியுள்ளாரன்றோ?

மறத்தை யழிப்பதூஉம் அறம்; வீடளிப்பதூஉம் அறம்; கடவுளுருவாய் நின்றதூஉம் அறம்; எப்பேறுகளையும் அளிக்கத்தக்கதூஉம் அறம்;இன்னும்அச்சந்தவிர்ப்பதூஉம் அறமே.

"அறமே மறங்கண் முழுதளிக்கும்; அறமே கடவுளுலகேற்றும்; அறமே சிவனுக் கொருவடிவம் ஆகும்; சிவனைவழிபடுவோர்க்கு அறமே யெல்லாப் பெரும்பயனு மளிக்கும்;யார்க்கு மெவ்விடத்தும் அறமே அச்சந் தவிர்ப்பது; என அறைந்தான் சாதாதபமுனிவன்."

அறமே யெல்லாப் பேறுகளுக்கும் காரணமா யிருப்பது தோன்ற, அதை மேலோர் புருஷார்த்தங்கள் நான்கினுள்ளும் முன்னிறூஉவினர் போலும். அல்லதூஉம், நல்லிசைப் புலமை மெல்லியலாகிய நமது ஔவையாரும் தான் மொழிந்த, ஆத்திசூடியின் கண், அறஞ்செய விரும்பு, என்று அறத்தையே முதற் சூத்திரத்தின் கண் வைத்தனர். நிற்க,

3. முன்புரிந்த அறத்தின் பயனாகவே பொருள், இன்பம் என்றவிரண்டும் ஒருவனை அடைகின்றன. பொருள் இன்பம் என்றவிரண்டும் ஒருவனிடத்தி லிருந்தும், அறமென்பதொன்றில்லா விடத்து, அப்பொருளு மின்பமும் அறத்தின் பயன் கலவாமையால் அவன் கேட்டுக்கே வித்தாகு மென்பது திண்ணம். "பொருளு மின்பமும் பாபத்துக்கே காரணம், அறமொன்று சேரில்பாபத்தைக் களைந்து அவ்விருபேறுகளும் அறத்தின் பயனுடைய வாம் என்பது பொதுவழக்கு." என்று ஆன்றோர் கூறி யுள்ளார். ஆதலின், அறத்தினை யொருவன் செய்வதினு லடையும் பயனும செய்யாவிடி லதனாலடையும் கேடுகளும் அளவிடற் கரிது.

'அறத்தினூஉங் காக்கமு மில்லையதனை
மறத்தலினூஉங் கில்லைகேடு' (குறள்)

4. இன்னோரன்ன சிறப்புவாய்ந்த அறம் முப்பத்திரண்டு வகையாமெனமுன்னோர் வகுத்துளர். அவையாவன:- கோதானம், பூதானம், கன்னிகாதானம், சத்திரங்கட்டுதல், குளம்

வெட்டுதல், சாலையமைத்தல், தண்ணீர்ப்பந்தர் வைத்தல், ஆவுரிஞ்சுதறி நாட்டுதல், மடங்கட்டுதல், வீடுகட்டிக் கொடுத்தல், பசுவுக்குப் புல்லிடுதல், விலங்குகட்கிரை கொடுத்தல், பறவைகட் கிரையளித்தல், மகப்பெறுவித்தல், மகவளர்த்தல், மகவுக்குப் பாலளித்தல், மகவுக்குச்சோறளித்தல், ஓதுவார்க் குணவளித்தல், ஏழைகட் கன்னமிடுதல், நோய்க்குமருந்து தருதல், விலை கொடுத்து உயிர்காத்தல், ஆடையழுக்கை அகற்ற வண்ணாரைவைத்தல், க்ஷௌரத்திற்கு நாவிதரை வைத்தல், தாம்பூலம் தருதல், அணிகலனளித்தல், தலைக்கெண்ணை தருதல், பிறர் கடன் தீர்த்தல், பிச்சையிடுதல், அநாதைப்பிணம் சுடுதல், ஆசையளித்தல், தின்பண்டம் நல்குதல், துயர்தீர்த்தல், என்பன; இவற்றுட் சிலவேறு வேறாகவும் கூறப்படும்.

இம்முப்பா னிருவகைப்பட்ட அறங்களி லியாதானும் மொன்றைச் செய்ய விரும்புகிறவர்கள் காலமுமிடமுங் கருதி செய்தல் அத்யாவசிகமாம். ஏனெனின், கங்கைக்கரையில் நல்லமழைக்காலத்தில் ஒருவன் தருமத்திற்காக தண்ணீர்ப்பந்தர் அமைப்பானேல், அவ்வறம் பயன் படுவதியார்க்கு? அவ்வாறின்றி, ஆப்பிரிக்கா கண்டத்தில் ஸகாராபாலைவனத்தினிடையில் நல்ல கோடைகாலத்தில் தண்ணீர்ப்பந்த ரமைத்தால், அதனால் அவ்வழிச் செல்லும் யாவரும் பயனடைவாரன்றோ? ஆகலின், காலமுமிடனும் கருதி அறஞ்செய்தலே நலம். அல்லதூஉம், "பாத்திர மறிந்து பிச்சையிடு" என்ற முதுமொழிப்படி நாம் அளிப்பது ஒரு காசானபோதிலும் அதைக்கொள்வோனுடைய குண முதலியவற்றைக் கருதியே யீதல் வேண்டும். எற்றுக்கெனின், கொள்வோன் நற்குண நற்றொழில் வாய்ந்தவனாகில், தான்கொண்ட பொருள் எத்துணைச் சிறிய தேயாயினும், அதை நன்னெறியிற் செலவிட்டு அவ்வினைப்பயனால் தன்னையும் தனக்கீந்தோனையும் மேன்மை படுத்துகின்றான். அவ்வாறன்றி ஓர் துஷ்டனுக் குதவிய பொருள் தீநெறியிற் செலவிடப்பட்டு அதனால் வருமபாதகத்திற்கு கொண்டோனையுமன்றி கொடுத்தோனையு முள்ளாக்குகின்றது. இவ்வண்ணம் நல்லோர்க்களித்தும் தீயோர்க்களியாக கற்றுவதுமே வழக்கெனக் கொள்ளினும், பசிக்குணவளிக்கும்போது நல்லோர் தீயோர் என்ற பேதம் பாராட்டாது யாவர்க்குமே அளித்தல் வேண்டும். ஏனெனின், அளிக்கப்பட்ட உணவு நல்லோ னெனினுந் தீயோ

னெனினும் உடனே பசியகற்றி உயிரைக் காத்து பயனளி த்து விடுகின்ற படியால் அவ்வறம் பின்னர் தீமை விளைக்கக் காரணமில்லை.

6. அறமானது காமம், வெகுளி, முதலிய துர்க்குணங்களற்று அன்போடும், முகமலர்ச்சியுடனும் இனிய வசனத்துடனும் இயற்றப்படவேண்டும். விருப்போடு செய்வதே அறம்; ஒருவர் வற்புறுத்திசெய்வது அறமன்று. இது பற்றியே நம் மூதாட்டியாரும் 'அறஞ்செய்' என்று சொல்லாமல் 'அறஞ் செய விரும்பு' என்று 'விரும்பு' என்ற சொல்வைத்து முடித்தார் போலும்!

'அழுக்காறவாவெகுளி யின்னாசொனான்கும்
இழுக்கா வியன்றதறம்.' (குறள்)

7. இன்னோரன்ன பெருமை வாய்ந்த அறத்தை ஒவ்வொருவரும் சமயம்நேர்ந்தழி நாளைக்கென்று வையாமல் செய்து முடிக்கவேண்டும். அறமியற்ற காலநியதியில்லை. நினைத்தபோழ்தே அறஞ்செய்யலாம். செல்வம் நிலையாததென்பதை யுன்னனிம்கையில்பொருளிருக்கும்போழ்தே செல்கதிக்கோர் துணையாக யாதானுமோர் நல்லறம் புரிதல் வேண்டும்.

"ஆறிடு மேடு மடுவுபோலாஞ் செல்வம்
மாறிடு மேறிடும் மானிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து"

என்பது நல்வழி; அல்லதூஉம், 'இன்றைக்கிருப்பவரை நாளைக்கிருப்ப ரென்றெண்ணவோ இடமில்லை' 'இருப்பதுபொய் போவது மெய்யென் றெண்ணி' நாம் நிலவுலகிலிருக்கும்பொழுதே நாம்செல்ல விருக்கின்ற மறுமைக்கு வேண்டிய சாதனங்களைத்தேடி வைக்கவேண்டும்.

'நெருநலுளனொருவனின் றில்லையென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு'

'காலைசெய்வோ மென்றறத்தைக்கடைபிடித்து,
சாலசெயவரே தலைப்படுவார்.'

அவ்வாறின்றி "நமக்கு வயது இருபத்தைந்து தான் ஆகின்றது நம் ஜாதகத்தில் நமக்கு வயது எண்பது என்று சொல்லியிருக்கின்றது. ஆதலால் இன்னும் ஐம்பத்தைந்து வருஷத்திற்குள் அப்பா! வேண்டிய தருமங்கள் செய்யலாம்." என்றெண்ணிக்கொண்டு, 'பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத் தங்கள் துருத்திக் கறுசுவைபோடுகின்றவர்களாய், வாளாவிருக்கும் குலாமகர்கள் உயிர் விடும்

போது "மூப்போதும் அன்னம் புசிப்பதும் தூங்குவதும் மோகத்தினால், செப்போதிளமுலையாருடன் சேரவுஞ்சிவன் விடும், அப்போது கண்கலக்கப் படவும் மமைமத்தாய்" என்றும், 'உண்டுண் டுறங்குவதைக் கண்டதே யல்லாது வொருபயனடைந்திலேன்.' என்றும் நெஞ்சம் புண்ணாகி கண்கலக்கப் படுகின்றார்கள். என்னேயவர்கள் மதியிருந்த வாறு?

'இளமையு நிலையாவாலின்பமு நின்றவல்ல, வளமையுமஃதேயால் வைகலுந்துன்ப வெள்ளம், உளவெனநிலையாதே செல்கெதிக்கென்று மொன்று, விளைநில முழுவாரபோல வித்துநீர்செய்துக் கொண்மின்."

இதனையே கபிலதேவர் பின் வருஞ்சில வரிகளால் வெள்ளிடை மலைபோல்விளக்கி யிருக்கின்றனர்.

"உலகத்தீரே! உலகத்தீரே!
நாக்கடிப்பாக வாய்ப்பறையறைந்து
சாற்றக்கேண்மின் சாற்றக்கேண்மின்!
மனிதர்க்குவயது நூறல்லதில்லை;
ஐம்பதிரவிலகலுந் துயிலிலால்;
ஒட்டியவிளமையிலோ ரைந்துநீங்கும்;
ஆக்கையிளமையிலேம் மூன்றுநீங்கும்;
எழுபதுபோக நீக்கிருப்பன முப்பதே.
அவற்றுள்,
இன்புறுநாளுஞ்சில வேயதாஅன்று,
துன்புறுநாளுஞ்சில வேயாதலால்,
பெருக்காறொத்தது செல்வம்;பெருக்காற்
றிடிகரை யொத்ததிளமை; யிடிகரை
வாழ்மரமொத்தது வாழ்நாள்;ஆதலால்,
ஒன்றேசெய்யவும் வேண்டுமவ்வொன்றும்
நன்றேசெய்யவும் வேண்டுமந் நன்றும்
இன்றேசெய்யவும் வேண்டுமவ்வின்றும்
இன்னேசெய்யவும் வேண்டுமவ்வின்னும்
நாளைநாளை யென்பீராகில்
நம்முடைமுறை நாளாவது மறியீர்
நமனுடைய முறைநாளாவது மறியீர்
எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்."

ஆதலின், எடுத்தற்கரிய மானிடஜென்மம் எடுத்தவர்கள் தங்கள் வாணாளைவீணாக்காமல் தம்மாலியன்ற வளவு யாதானும் ஓர் நல்லறம் செய்வாராக.

'தேங்கு விண்போகமுஞ் சிறந்தமுத்தியு
மீங்குறுமாக்கமுமினிது நல்கலா
லோங்கிய வறத்தினை யுளமுன்மூன்றினும்
பாங்குறநித்தலும் பரிந்து செய்தியால்.

செந்தமிழ்ச் சிறுவன்
கூத்தப் பாக்கம்

முல்லைக் கொடி

என்னே உன் மாயம்! வாழி! முல்லைவல்லி! என்னே உன் மாயம்! என் உள்ளமும் கவர்ந்து கொண்டாயே! ஏஎ! யான் எவ்வளவு? உன் ஆற்றலுக்கு யானும் ஒருபொருளோ?—முன்னமுன்னே எம்தந்தையராகிய தமிழரைத் தகைந்துகொண்டாய்; உன் பல்லைக் காட்டி கையை நீட்டியும அவர் உள்ளம் கவர்ந்தாய்!—உன்மேல் வைத்த காதலால் அன்றோ அவர், நானிலத்தில் ஒன்றை உன்பெயர் இட்டு வழங்குவராயினர்?—உன்மணத்தாலும் நிறத்தாலும் அவர் மகளிர் மனத்தையும் மயக்கிவிட்டாய்! தாம் கற்புடையார் என்று பிறருக்குக்காட்ட, உன்னைக் குழலிலே சூட்டிக்கொண்டு அவர் உழலுவாராயினர்அன்றே! ஆ! நீ வெள்ளையாயிருந்தே அவர் கற்பிற்குக்கரியாயினையே! ஓ! உன் ஆற்றல் இம்மட்டோ? தொண்டைமானுடைய களிற்றின் காலைக் கட்டிவிட்டாய்! அவனைச் சிவபணியிலே தவநிறுத்தினாய்!— பாரியினுடைய தேரை ஓடாமலே தடுத்து, அவனைப் பாடாமலே அதைப் பரிசுபெற்றாய்! ஓகோ! உன் ஆற்றல் பெரிது பெரிது! அவ்வாற்றலைக் கொண்டே என்னையும் அகங் கவர்ந்து கொண்டாய்! முல்லை வல்லி! யானோ உன்னை விடேன்! பெரியோர் முன்னே உன் புகழை—முற்றவும் ஆற்ற முடியாவிட்டாலும்—ஆற்றாமல் விடவே விடேன்!

செந்தமிழ் மணமும் செவ்வியும் தெரிந்த நமரங்காள்!

முல்லைக் கொடியின் காலத்தை வரையறை செய்ய நாம் முயலுவோமாயின், இத்தமிழகத்திலே நம்முன்னோர் முதன் முதல் அடிவைப்பதற்கு முற்பட்ட காலமே இதன் காலம் எனச் சற்றும் தடையின்றிச் சொல்லி விடலாம். இம் முடிவு எவ்வாறு பெறுகின்றோமென்றால்; தமிழகத்தை நானிலமாக வகுத்த நம்முன்னோர் காடும் காடு சார்ந்த இடத்தையும் முல்லை நிலமென்று பெயரிட்டழைத்தார்; அக் காலத்திலே அவ்வந் நிலத்திலே பழைமையாகவும் மிகுதியாகவும் பயனுள்ளவாகவும் இருந்தபூப்பற்றியே அவ்வந்நிலத்திற்கு அவர் பெயரை மத்தாரன்றி, தாம் எண்ணிய வாறெல்லாம் செய்துபோயினார் அல்லர். காட்டகத்தே காணப்படும் கணக்கில்லாத பூக்களும் அவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து கொள்ளாவாயின. மற்று, இம்முல்லையொன்றே மிகவும் அழகியதாகவும் பழையதாகவும் முற்பட்டுத் தோன்றினமையால், அவர் இதன் பெயரையே அந்நிலத்திற்குப் பெயராக அமைத்திட்டார். இவ்வாறு நானிலம் வகுத்தகாலம் இன்றோ நேற்றோ? இல்லை இல்லை! தமிழர், தமிழகத்திலே வந்து புகுந்து, குடியேறியிருந்து, நிலந்திருத்தத் தொடங்கிய காலத்திற்குச் சிறிது முன்னே அல்லது பின்னே ஆதல் வேண்டும். அது! அந்த அடிநாளிலே தானே நம் முன்னோர்க்கு, காட்டின் பண்டைப் பொருளாக இம்முல்லை காணப்பட்டதாயின், இதன் காலம், அவர் இந்நாட்டிற் புகுதற்கு முற்பட்டதே எனத் தெளிவாகின்ற தன்றோ!

2. அன்றியும், நமது நாட்டிற்கே உரியனவும் பழையனவுமாகிய தெய்வமே குடியே உணவே பூவே யென்னும் இவற்றைப் புகழ்ந்து பாடிய சங்கப்புலவர் மாங்குடி கிழாரும்.

"..............குருந்தே முல்லையென்

றிந்நான் கல்லது பூவு மில்லை"—புறம் 335-எனக் கூறிப்போயினர். இதனாலும், இம்முல்லைக்கொடியின் பழமை முற்றும் விளங்குகின்றதன்றோ?

3. இதன் பழமை இவ்வளவாக, இதன் பெருமை எவ்வளவு? அக்காலத்திலே ஆடவர் பெண்டிராகிய அனைவருடைய முடி மேலும் தோண்மேலும் பொருந்தும் முதன்மை வாய்ந்திருந்தது. அவரெல்லோரையும் தன் வண்ணத்தாலும் வடிவாலும் குணத்தாலும் மணத்தாலும் தனக்கு அடிமையாக்கி ஆட்சி புரிந்துவந்தது. இதன் பெருமைக்கு எல்லை இல்லை. மகளிர் கற்பிற்கு இம்மலரே வேலியாயிற்று. ஆடவர் குணமிகுதிக்கும் இம்மலரே அடையாளமாயிற்று. எவ்வாறு?

4. மகளென்னும் மலருக்குக்கற்பென்னும் மணமில்லையாயின்,அது என்னாகும்? கள்ளி மலர்போலக் கிள்ளுவோரும் கொள்ளுவோருமின்றி மலர்ந்து மலர்ந்து உலர்ந்தே போகும்! அழகு கண்ணைக் கவர்ந்து மயக்கும்; மணமொன்றே மனத்திற்சென்று மகிழ்விக்கும். இவ்வுண்மை பண்டைக்காலத்து மகளிர் யாவர் உள்ளத்திலும் பதிந்து கிடந்தது. அவரெல்லாம் பேதைமை யென்னும் பேரணி பூண்டிருந்தார்; ஆயினும், அவருள் ஒருவராவது கற்பழகைக் கையகன்றிருந்தாரில்லை;தம் கற்பைக் காப்பதே தமக்குப் பொற்பாம் என்று அதை அவர் அழியாது போற்றிவந்தார். அவர் கற்பும், பொய்யும் போலியுமாகிய இக்காலத்துக் கற்பே அன்று. மற்று, அது எவ்வகைய தென்றால்; மனமொழி மெய்களால் தினையளவும் மறுப்படாத மாட்சிமையமைந்ததாம். 'ஊறுபடாத கற்பினையாம் உடையேம்; உடையேம்' எனப் பிறருக்கு மெய்ப்பித்தற்பொருட்டு மணமுடியாத மங்கையரெல்லாம் முல்லைக்கண்ணியைக் குழலிலே முடித்துவந்தார்கள். மணந்துகொண்ட மகளிருங்கூட, 'எம்கணவரிடத்தே கற்பும் காதலும் தவறாமல் காத்து வருகின்றோம்' என எல்லோருக்கும் எண்பித்தற் பொருட்டு முல்லைமாலை அணிந்துவந்தார்கள். இவரே, "முல்லை சான்ற கற்பின் மெல்லியர்"— இப்பழய ஒழுக்கமே கற்பென்னும் முல்லைத்திணை; இதனையே, "முல்லை சான்ற முல்லையம் புறவு"—சிறுபாண் 149 எனவும், "முல்லை சான்ற புறவு"—மதுரை 285 எனவும், பண்டை நூல்களிலே பாராட்டப் படுகின்றது.

5. இன்னும், அக்காலத்தில் அரசரெல்லாம் முல்லைவடம் இரட்டையாக அணிவர்; இவற்றில் ஒன்று அரசமுல்லையும், மற்றொன்று காவன் முல்லையுமாம்; இவற்றை அவர் அணிதல், 'எமக்குரிய அர

சத் தன்மையினும் காவற்றன்மையிலும் யாம் குறைபாடில்லோம்' எனக் காட்டுதற் பொருட்டேயாம். இஃது இவ்வாறென்பதை,

"கொங்குடை முல்லைப் பைம்போதிருவடங்கிடந்த மார்ப!" என்னும் சிந்தாமணித் தொடரினும், அதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைக்கும் உரையினும் தெரிந்து கொள்ளலாம். அரசரேயன்றி, அந்தணரும் அறிவோரும், தாம் நடுவு நிலைமை உடையார் என்பதற்கு முல்லைமாலை பூணுவார். சோதிடனும், தன்கீர்த்தியை முல்லையணிந்து சொல்லுவன். வல்லாளும், தன் நல்லாண்மையை முல்லையாலே வெளியிடுவன். சான்றோரும் தம் சால்பினை முல்லைகொண்டு சாற்றுவர் இவ்வகை முல்லைத்தாரினை இளையான்குடி, மாறன் நாயனாரும் வாய்ந்திருந்தா ரென்பார், சேக்கிழார் சுவாமிகள், இவரை.

"வேரித்தாரான் விருந்தெதிர் கொண்டனன்"—பெரிய. இளை. 9 செ. என்றெடுத்து உரைத்தருளினார். என்னை? விருந்தெதிர் கோடலாகிய பொருந்திய ஒழுக்கத்தை நாயனார் இயல்பாகவே இயைந்திருந்தாராதலின், இவ்வியற்கைக் குணமிகுதியை முல்லையென்றல் மரபன்றோ? 'வேரித்தாரில்' இவ்வாறு அரும்பொருள் அமைந்து கிடக்கவும், அந்தோ! குலமும் குடியும் குறிக்கும் குவளைத்தாரென்று கூறிப் பொருள் நயம் சிதைக்கின்றார் சிலர்! நிற்க

6. இங்கே சொல்லிய முல்லை யாவும் வாகைத்திணையைச் சார்ந்தவை. (ஈண்டு ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தை நாம் கையாண்டிலம். என்னை? இவர்க்கு முற்பட்டாராய்த் திணைவகுத்தார் செய்தி கூறுகின்றோமாதலின்.) இவ்வாகைத்திணைக்கு முப்பத்திரண்டு துறைகள் உண்டு. அவற்றுள், பன்னிரண்டு துறைகள் முல்லைப்பெயரால் வழங்குகின்றன. இவற்றிலே நேரே அடங்காதனவற்றைப் பொதுவியலுள் அடக்கியுள்ளன. அவையாவன முல்லை கார் தேர் நாள் இல்லாள் பகடு பால் கற்பென எட்டுமாம். மக்களியற்கையை அகம் புறம் அகப்புறம் புறப்புறமென நான்காக வகுத்து வைத்து ஆழ்ந்து நுணுகி ஆராய்ந்தவர் நந்தமிழரேயன்றி ஏனையாவருமே இல்லை. இது உலகம் அறிந்த உண்மை! அம்மேலோர், மக்களின் அகவொழுக்கத்தினை ஐந்திணையாகப் பிரித்து அவற்றைப் பூவகையால் பெயரிட்டார். அவ்வாறே புறவொழுக்கத்தினையும் எழுதிணையாகப் பிரித்து, அவற்றைப் பூவகையால் பெயரிட்டு, அவற்றிற்கு அவ்வப்பூவினையே அடையாளமாக அமைத்தார். புறப்புறத்தை வாகை, பாடாண், பொது எனமூன்று திணையாக வகுத்து, இவற்றுள் முதற்றிணையை வாகைப் பூவினால் பெயரிட்டு, அப்பூவினை அதற்கு அடையாள மாக்கினார். வாகையென்பது குணமிகுதியினால் வெல்லுதல் ஆதலானும், முல்லை யென்பது குணமிகுதியைச் சொல்லுதல் ஆதலானும் இவ்வாகையிலே தானே முல்லையும் அடக்கினார். இன்னும், முயற்சியால் பெற்ற வென்றியே

வாகையாகலானும், இயல்பாகப் பெற்ற வென்றியே முல்லை யாகலானும், இவ்விரண்டும் தொழிற்பயன் வகையால் இரண்டாதல் அன்மையானும் வாகையிலே தானே முல்லையும் அடக்கினர். ஆயின், பொதுவியலுள் கூறிய முல்லையோ எனில், அது மனநிறைவினால் வந்த மகிழ்ச்சியை அம்மகிழ்ந்தவர் தாமே உரைத்த தென்க. இங்கே யாம் சொல்லவந்தது இஃதன்று. மற்று, மக்களொழுக்கத்தைச் செவ்வனே மதித்தறிந்து, அவ்வொழுக்கத்தை நிறத்தாலும் திறத்தாலும் ஒத்துள்ள மலரையும் மதித்தறிந்து, இவ்விரண்டினையும் உவமையானும் உருவகத்தானும் பொருத்தி, திணையும் துறையும் திருந்த வகுத்தமைத்த நம் முன்னோர், இச் 'சிறுவி முல்லை' யினிடத்தே எவ்வளவு விருப்பமும் மதிப்பும் வைத்திருந்தார்க ளென்பதை விளக்குதற் பொருட்டே என்க. சிறியன பெரியனவாகவும் செவ்வி மணங்களின் சிறந்தனவாகவும், எத்தனையோ மலர்கள் அக்காலத்தில் இருந்திருக்கலாமன்றே! அவற்றையெல்லாம் அடியோடே புறக்கணித்து இம் முல்லை யொன்றையே நல்லதென நாடித்தெரிந்து, அகப்பொருளிலே மகளிர் கற்புமிகுதியைக் குறிக்கவும், புறப்பொருளிலே ஆடவர் இயல்புமிகுதியைக் குறிக்கவும் அடையாளப்பூவாக இதனை அமைத்திட்ட அவ்வான்றோரது நல்லறிவினைப் புகழ்ந்துபோற்றல், அந்தோ! எம்திறமாகுமோ?

7. இனி, அக்காலத்திலே ஆயர்களும் முல்லைவடம் புனைந்து கொள்வார், இதனை. "நிறைந்த நீறணி மார்பின் நிரைமுல்லை முகைசுருக்கிச்செறிந்த புனைவடம்தாழ"— பெரிய. ஆனாயர் 17 எனவும்,

"பல்லினாற் சுகிர்ந்த நாரிற் பனிமலர் பயிலப் பெய்த முல்லையங்கண்ணிசிந்த"—சிந்தா. கோவிந்தை. 29 எனவும் வரும் பண்டைச் செய்யுள்களே வலியுறுத்தும். ஆயினும் இவ்வாறு இவர்புனைதல் ஓர் ஒழுக்கத்தைச்சுட்டி அன்று. மற்று, தாம்வாழும் 'முல்லைசூழ் முல்லை வேலியின்' எவ்விடத்திலும், தாம் பலகாலும் வழித்தெரியும் பானுரைபோல வெள்ளெனப்பூத்து, கண்நிறைந்த அழகும் கான் நிறைந்த மணமும் வீசிக்கொண்டு நிற்கின்றமையால், இதை இவர் பறித்துத் தொடுத்துப் புனைகின்றார்கள்.

8. பண்டைத் தமிழ் நூல்களிலே, "முல்லை முகைபோலும் வெண்சோறு" எனவும், "முல்லை மென்கொடி எயிறென முகைக்கும்" எனவும், "வெருக்குப்பல் உருவின்முல்லை" எனவும், "சிரல்வாய் உற்றதளவு" எனவும், முல்லை முகையை ஒடியாப் புழுக்கலுக்கும் மகளிர் பல்லிற்கும் பூனைப் பல்லிற்கும் சிச்சிலிப்பறவை மூக்கிற்கும் உவமம் கூறியுள்ளது. அன்றியும், "கான முல்லைக் கயவாய் அலரி" எனவும், "சிறுவீ முல்லைப்பெரிது கமழ் அலரி" எனவும், "கூதிர் முல்லைக் குறுங்கால் அலரி" எனவும், "மூழிவாய் முல்லை" எனவும் முல்லை மலரைப்

பலவாறு பாராட்டியுமுள்ளது. பலகாலும் நன்றாக யாவரும் பழகி யறிந்தனவாகிய உயர்ந்த பொருள்களையே உவமம் கூறப்படுமாகை யால், முல்லையானது எல்லோரும் அறிந்த பழமையும் எளிமையும் உயர்வும் படைத்தது என இதனால் விளங்குகின்றதல்லவோ? இன்னும், அக்காலத்துத் தமிழ்ப் புலவர்கள், இச் 'சிறுவீ முல்லைத் தேங்கமழ் பசுவீ' யினிடம் எத்துணை மதிப்புடையரா யிருந்தாரென்பதும் எளி தாகத் தெரிகின்றதல்லவோ?

9 முல்லை நிலத்திற்கு உரிய பெரும்பொழுது கார்காலம்; சிறு பொழுது, மாலை; ஆகவே, இக்கொடி கார்காலத்திலே தளிரெடுத்துத் தழைத்து நனைகட்டி அரும்பும், மாலை நேரத்திலே மலர்ந்து மணம் வீசும். இந்த மாலைப் பொழுதினை ஒரு புலவர்,

"அடர் சினம் தணிந்து குன்றம் சேர
நிறை பறைக் குருகினம் விசும்புகந் தொழுக
எல்லை பையயக் கழிப்பி முல்லை
அரும்புவாய் அவிழும் பெரும்புன் மாலை"

என மிகவும் அழகாக அமைத்துரைக்கின்றார்.

10 திருத்தக்க தேவர், முல்லை நகை நகைத்தலை உலகநடையிலே வைத்து மிகவும் நயம்படப் புனைந்த ஒரு செய்யுள் இதுபொழுது எம் நினைவுக்கு வருகின்றது. இதன் சுவையெல்லாம் இதைப் படிக்கின் றவர் தாமே அறியட்டும்.

"மிக்கார்தன் கேட்டின்கண் மேன்மையிலாச் சிறியார்போல்
நக்காங்கே எயிறுடைந்த நறவுமுல்லை நாள்வேங்கை
தக்கார்போற் கைம்மறித்த காந்தள் அந்தோதகா தெனவே
தொக்கார் போற் பன்மாவும் மயிலும்தோன்றித் துளங்கினவே" பதுமை-102.

11. பண்டைக் காலத்திலே சிறுமியரெல்லாம் பலவகையான ஆட் டிலும் பாட்டிலுமேபோது போக்காகப் பழகிவந்தனர் - அவ்வாறான ஆட்டங்களிலே முல்லை வளர்த்தலும் அவர்க்கு ஒன்றாயிருந்தது. பெண் கள், தம்பேதைப் பருவம் கழியு முன்னர், தாம் பிறந்தநாள் ஒன்றிலே முல்லைக் கொடி யொன்று கொண்டுவந்து. தம் முன்றிலிடத்தே நட்டு, மிகச்சீரும் சிறப்பும் காட்டி அதனைப் பயிராக்குவார். அதற்குப் பவழ முத்தினாலே பாத்திகட்டி, கற்பூர குங்குமம் கலந்த சந்தனக் குழ ம்பை எருவட்டி பால்தேன் கூட்டிப் பனிநீர் பாய்ச்சுவர்; பட்டுவிரித்து நிழலமைப்பர்; மணிமாலை சூட்டித் தோழியெனப் பாராட்டுவர்; கமுக மரத்தைக் காலாக வளர்த்துப் பந்தரிடுவர். இவ்வாறு செல்வச் சீராட்டு பெற்றுச் செழித்த முல்லை, முன்ன முன்னே முகையரும்பி முகிழ் த்து விட்டதாயின், பெண்களெல்லாம் கூடி அதற்குப் பெருவிழாக் கொண்டாடுவர். தம் கையினாலே நட்டுவளர்ந்த ஒருமுல்லை, கொம்பேறி வளர்ந்து, கொடியோடிப் படர்ந்து முதலரும்பு எடுத்து முகை விரிந்து நிற்குமானால், அது அக்கொடியை வளர்த்தோருக்கு விரைவிலே மணங்கூடுமென்பதற்கு அறிகுறியாம்-இது மகளிர் வழக்கு.

12. இனி, இம்முல்லைக் கொடியின் செயற்கு அரும் செயல் சில வற்றைச் சொல்லுவாம்.

"சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட்டு
எல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட் டருளிய இறைவனே! என்றும்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில் நாதனே! நரை விடை ஏறீ!
பல்கலைப் பொருளே! படுதுயர் களையாய்; பாசு பதா! பரஞ்சுடரே!—தேவாரம்.

திரையன் தொண்டைமான், தன் தந்தைகட்டளைப்படி தண்டக நாட்டிலிருந்து அரசு புரியும் பொருட்டு நாற்படையும் சூழ அந்நாடு நோக்கி வந்தபொழுது, முதலிலே காஞ்சிநகரமே அவன் கண்டனன். கண்டவன், அந்நகரத்தில் அழிந்தனவற்றை அழிவுதீரப்புதுக்கி ஒரு நல்ல நாளின் நல்லோரையிலே நகர்வலங் கொண்டு வந்து அரண்மனை புகுந்து அமர்ந்தான் அமர்ந்த அன்றிரவு அவன் அமளிமேல் இருந்த பொழுது கிண்ணென ஒருமணியோசைகேட்டது. மறுநாள், மன்னவன், தம் மந்திரிமாரை அழைத்துத் தான் கேட்ட மணியோசையை அவர்க்கு அறிவித்து, "எம்பெருமான் திருத்தளி யொன்று இவ்விடம் இருத்தல் வேண்டும். அதன் அருத்த யாமத்து மணியோசையே ஆகும், யான் கேட்டது! என்றான். எனக்கேட்ட மந்திரிமார், "அரசரேறே! ஆலய மொன்றும் அண்மையிலே இல்லை. யாம் கண்டளவில் ஒரு மலைக்கோட்டையே உண்டு. அதற்குப் புழலென்று பெயர்; அது புழற்கோட்டத்தில் உள்ளது. வெள்ளெருக்கந் தூணையும் செம்பவளத் தூணையும் உடையது; அதன் கதவு வெண்கலத்தாலாகியது. அதில் வாழ்வார் கொடுங்கோலர் மன்னர் கேட்ட மணியோசை அவ்விடத்ததே ஆகும்!" எனச் சொல்லினர். அரசன் அக் கோட்டையைக் காண அவாமிகுந்து நாற்படையும் தன்னைச்சூழ அவ்விடம் நோக்கிப் புறப்பட்டான். அவன் வருகை அறிந்து அக்கோட்டையில் வாழ்ந்த கொடியோர், தம்படையோடு வந்து எதிர்ந்தார் - எதிர்ந்தவரை 'யான் போர்புரியும் எண்ணமிலேன்'என அரசன் எவ்வளவோ நயமொழி கூறியும், அதைஅவர் நம்ப இல்லை. போருக்கே புறப்பட்டார். பின்னர் இருவர் படையும் எதிரெதிர் நின்று, வில்வளைத்து, அம்புதூவி அரும்போர் செய்தன. அப்போரிலே அரசன் படைக்கு ஆற்றமாட்டாராய் அக்கொடியோர் புறங்காட்டி ஓடிப் புழற்கோட்டையில் ஒளிந்து கொண்டார்-அங்கே, மானம் தம் மனத்தைச் சுடுதலால், அக்கோட்டையில் இருந்த வயிரவர்கோயில் முன்சென்று, அதுவரையும் தமக்குவெற்றி அளித்து வந்த அவ்வீரனை வணங்கி நின்று, "ஐயனே! எம் பகைவனை வெல்லஒரு பூதம் படைத்துத் தரவேண்டும்." எனவேண்டினர். அவர் வேண்டுகோளுக்கு இரங்கிய வயிரவர் ஒருபூதம் தந்தார் அதனைத்தமக்குத் துணையாகக் கொண்டு, அக்கொடியோர் மறுபடியும் போர்க்களம் புகுந்தார். அது கண்ட அரசன் ஐயமுற்றுத் திகைத்தான். உடனே ஒற்றர் ஓடி அவனை நெருங்கி, பூதத்தோடு பகைவர் புறம் வந்ததையும் அப்பூதம் பசித்தோர்க்குப் பாற்சோறு போலப்பகழியெல்லாம் விழுங்குவதையும் தெரிவித்தார். அது தெரிந்த அரசன் 'இனி யாம் இங்குநின்றால் சிறைப்படுவோம்' என்றஞ்சி, தன்களியானையைத்திருப்பி நடத்தினான். அது விசையோடு நடந்து செல்கின்ற பொழுது அவ்வழியிலே இருந்த ஒரு முல்லைப்புதல் அக்களிற்றின் காலைத்தகைந்து கொண்டது. அரசன் பாவம் என்ன செய்வான் கொடி?யோருக்கு அஞ்சிவந்து வழியிலே இக்கொடியாலே தொடங்குண்டால் அந்தோ! என்னசெய்வான்? கோவம் கொதிக்க, கொடியைநோக்கினான். உதடு துடிதுடித்தது. உடைவாளை உருவினான். "இன்னும் விடாயோ?"எனக்கூவி வாளை வீசினான்-அவ்வீச்சு முல்லைக்கொடியைத் தறித்த தோன்றா, அம்முன்னவனுடைய திருமுடியினும் பட்டது! வாளதிர்ச்சி கைக்கு ஏறி, அதன் காரணம்தேட, தொண்டைமான் களிற்றினின்று கீழே குதித்தான். அங்கே, திருக்கோயில் கொண்டிருந்த இறைவனுக்குத்

திருமுடியிலே குருதி கொப்பளிப்பதைக் கண்டு, "ஆ ! எம்பெருமான் மாசிலாமணியோ!" என நாக்குழறி, மதியழிந்த மன்னன் மண்மிசை வீழ்ந்தான். சிறிது நேரம்வீழ்ந்தபடியே இருந்து, பின் அயர்வுதெளிந்தெ ழுந்து, உடலெல்லாம் நடுங்க, உச்சிமேல் கைகூப்பிநின்று, "ஐயோ! ஏழைமதி! என்செய்தேன்! என் செய்தேன்! பொல்லாவினையேன் இன்னும் உயிர் வாழ்வதோ!" என ஒருவன்செய்கை செய்துகொள்ளவா ளுருவினன். அவ்வளவில், சர்வசீவதயாபரனாகிய சிவபிரான்விடையார் திருக்கோலனாய் வெளிவந்து, "மன்ன! உன்வாளால் வடுப்பட்ட பின்னும் யாம் வடுவிலா மணியே! நீ அஞ்சாதே! இதோ இந்நந்தியை உன் துணையாகக் கொண்டு உன்பகைவரை வெற்றி கொள்ளு" என உறுதி யருளி உருக்கரந்தான் - பின்னர் நந்தி பிரான் உதவியால் அக்கொடி யோரை அரசன் வென்று, அவர் ஈட்டிவைத்திருந்த பொருள்கொ ண்டு மாசிலாமணி ஈச்சுரனுக்கு மண்டப கோபுர ஆலயங்கள் சமைத் துத் திருப்பணிசெய்து வாழ்ந்தான். இப்பதியே இன்றும் திருமுல்லை வாயிலெனத் திகழ்கின்றது. கண்டீரோ! முல்லையின் செய்கை! சிவ த்தொழும்பிலே தொண்டைமானை நிறுத்தல் ஏனைய கொடிகளுக்கு இயைவதொரு காரியமோ?

13. இன்னம் ஒன்று; உலகம் உள்ளளவெல்லாம் தம்பெயரும் உள தாம்படி, வரையாது கொடுத்து வள்ளலென்னும் பெயர் நாட்டினோர் எழுமூவர்-அவருள் கடையெழுவரில் ஒருவன் வேள்பாரி என்பான். இவன்கையே யன்றிக் கற்பகத்தை இதுவரையும் கண்டறிந்தாரில்லை. தன்னுடைய முந்நூறு ஊரையும்பரிசிலர்க்கு ஈந்து இன்படைந்தவன். "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பார் இல்லை" என்று சுந்தரமூர்த்தி நாயனாராலும் இசைத் தருளும்படி இசைநிறை ந்தவன். செந்தமிழ்ப் புலவர் கபிலரோடு செறிந்த நண்புடையவன். இக் கொடை வண்மைக் கோமான், ஒருநாள், தேர் ஏறிச்செல்கின்ற வழி யிலே, அத்தேரினை ஒரு முல்லைப் புதல் தன்கொடிக் கைகளால் தடு த்து விட்டதாம். அதுகண்ட அவ்வள்ளல், "ஏ! முல்லாய்! என் தேரை யோ வேண்டினாய்! இதோ பெற்றுக்கொள்" என அத்தேரினை அத ற்கே அளித்து மேலொன்றும் நினையாமல் சென்றானாம். கண்டீரோ! இம்முல்லைக் கொடியின் மேம்படு செய்கை மற்றெல்லோருக்கும் வரு வதோ? கற்றுவல்ல அறிவாளருக்கும் வருவதோ? தாம் பாடுபட்டுக் கற்ற கல்வியால் ஈயாதஈனர்களைப் பாடிப்பாடி மனத்தளர்ச்சி யன்றி மற்றொன்றும் அடையாதவரன்றோ புலவோர்! இம்முல்லைபோல, கைவண்பாரி, தன்னிடம் வரக்கண்டு, அவனைப்பாடாமலே தேர்க் கொடை பெறவும் வல்லரோ அவர்?

14. இதுவரையும் சொல்லிப் போந்தவற்றால் முல்லைக்கொடி நந் நாட்டிற்கே உரியமிகப் பண்டைப் பொருளெனவும்; இது, அகப் பொருளிலே கற்பினையும், புறப்பொருளிலே இயல்பு மிகுதியையும் குறிப்பதெனவும், ஆதலால் இதனை ஆடவர் பெண்டிர் அனைவரும் முற் காலத்தில் அணிந்து வந்தாரெனவும்; தன்னிலே அமர்ந்திருந்த மாசி லாமணி ஈசுரனை மன்னர்பிரான் தொண்டை மானுக்குத் தெரிசனப் படுத்தி அவனால் திருமுல்லை வாயிலைத் திகழ்வித்ததெனவும்; வேள்பா ரியினிடம் தேர்ப்பரிசு பெற்றதெனவும் முல்லையினுடைய பழமை யையும் பண்பும் பெருமையும் செய்கையும் ஒருவாறு தெரிவித்ததா மென்க.

மயிலை கிழான்.

ஒரு பிரசங்கம்

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பிங்கள - ஆடி மீ௨௨ செந்தமிழ்ப் பரிபாலன சபை ஸ்தாபிதமானபோது ஸ்ரீமான் ஸர். பொன்னம்பலம் அருணாசலமவர்கள் Kt., M A. செய்தது.

சில தினங்களுக்கு முன், செந்தமிழ் அபிமானமுள்ளவரும் தமிழ்க்கல்வி விருத்திக்காக மிகவும் உழைப்பவருமாகிய ஸ்ரீ த. கைலாச பிள்ளையவர்கள் நம்மிடம்வந்து, தற்காலம் யாழ்ப்பாணத்திலே தமிழ்க்கல்வி மிகவுங் குன்றியிருக்கின்றது, அதை வளர்த்தற் பொருட்டுப் பல முயற்சி செய்யவேண்டும், அந்நோக்கத்துடன் ஒரு சபை கூட்டவெண்ணியிருக்கின்றோம் அங்குவந்து சபாநாயகராயிருந்து சபையை நடத்தவேண்டும் என்று கேட்டார்கள். அக்கேள்விக்கு விருப்பமாய் உடன்பட்டேம். இந்த நற்கருமந் தொடங்குதற்கு, நாம் கூடியிருக்கிற இச்சைவப்பிரகாச வித்தியாசாலை உரிய ஸ்தானமாயிருக்கிறது. எழுபது வருடங்களுக்கு முன் தமிழ்க்கல்வியும் சைவமுந் தழைத்தோங்கவேண்டும் என்னும் பரோபகார சிந்தையும் முயற்சியுமுடையாராய்த் தம்வாழ்நாள் முழுவதையும் அதிற் போக்கி யாழ்ப்பாணத்தார் பெயரையும் புகழையும் எங்கும் நாட்டி இலங்கையிலும் வடதேசத்திலுந் தமிழ்க்கல்வியும் சைவமும் பரப்புதற்கான ஓர் தீபமாய் விளங்கிவந்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரென்னும் மகானால் ஸ்தாபிக்கப்பட்டது இவ்வித்தியாசாலை. அக்காலத்தில் அமெரிக்கன் மிஷன் பாதிரிமார் முதலியவர்களாலும் தமிழ்க்கல்வி வளர்ச்சியடைந்தது. நாவலரவர்களிடமும் அப்பாதிரிமாரிடமும் படித்தமாணவர்கள் சிறந்த வித்வான்களாய் நூல்களை எழுதியும் நூல்களுக் குரைசெய்துந் தமிழ்க்கல்வியைப் போதித்தும் உலகிற்கு நன்மை செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களாவது மற்றும் வித்வான்களாவது திரும்பிவந்து யாழ்ப்பாணத்திலே தமிழ்க்கல்வி தற்காலம் அடைந்திருக்கும் நிலையைக் கண்டால் அவர்கள் மனம் என்ன பாடுபடும்! வித்வான்களென்றால் அவர்களிடம் படித்த எஞ்சிய மாணவர்களே ஒழிய, புதிதாக வித்வான்கள் காணகிடைக்கவில்லை. பள்ளிக்கூடங்களில் மூன்றும் நான்காந் தரத்துக்கு மேலே தமிழ்க்கல்வி படிப்பது அரிது. அதுவுங் கிரமமாய்ப் படிப்பாரில்லை அரசாட்சியாரின் கட்டாயத்துக்காகவே படிக்கிறார்கள். அங்குப் படிக்கும் நூல்களும் கற்றுத்தேர்ந்தவர்களா லெழுதப்படாமையாற் பிழையுள்ளனவா யிருக்கின்றன. தமிழ் மொழியிற் பேசவும் பிள்ளைகள் வாய் கூசுகின்றார்கள். ஆங்கில மொழியையே வீடுகளிலும் வயல்களிலும் வீதிகளிலும் உபயோகிக்கின்றார்கள். ஆங்கில பாஷையைக் கற்று உத்தியோகஸ்தராயாவது வியாயதுரந்தரராயாவது அமர்ந்திருப்பவர்களும் எக்காலமும் பேசுவது ஆங்கிலமே. அவர்கள் வீடுகளிலுள்ள பெண்டு பிள்ளைகளும் அப்ப

டியே எனக் கேள்வி. வாயிலே தமிழ்வந்தால் இழிவென்றும் ஆங்கிலம் பேசினுற் சங்கையென்றும் எண்ணுகிருர்கள். இந்தப் பழக்கம் இன்னும் சிறிது காலம் நிலை நின்றுல் யாழ்ப்பாணத்திலே தமிழ் மணமும் இல்லாமற் போகும்போ லிருக்கின்றது.

தமிழ்போனுல் தமிழர்களெங்கே? பாஷையோடு சாதியும்போய், பறங்கிகளும் மிலேச்சர்களுமாவார்கள். பிராஞ்சு தேசத்திற் பிரபல்லியமான ஒரு புலவர் சொல்லுகிருர் " ஒரு சாதியாரின் உயிர்நிலை எங்கேயிருக்கிற தென்ருல் அவர்களுடைய தாய்மொழியிலேயே யிருக்கின்றது; அம்மொழி கேடடைந்தால் அவர்களும் அழிந்தவர்களே." இது சத்திய வாக்கு. ஆகையால் தமிழபிமானமில்லாத தமிழர்களை உயிரோடிருப்பவாக ளென்று சொல்லலாகாது, என்புதோல் போர்த்த உடம்பென்றே சொல்லத்தகும். ஆங்கிலக்கல்வி தற்காலம் கற்கவேண்டுந்தான். அதில்லையாயின் உத்தியோகத்துக்கும் சீவனத்துக்கும் இடையூருகும். ஆனுற் காலம் முழுவதையும் அதிற்போக்கவேண்டியதில்லை. தமிழ் படித்தற்குப் போதிய காலம் வைத்துக்கொள்ளல் வேண்டும். வயிறு வளர்த்தற்பொருட்டுக்கற்கும் கல்வி கல்வியெனத்தகுமோ?

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப் படும்" என்ருர் நாயனுர்.

மாணவர்கள் தங்களுடைய மனதில் இக்கருத்தைப் பதியாமற் பொருளை நோக்கியே படிக்கின்றமையால் ஆங்கிலக்கல்வியில் ஒருவாறு தேர்ந்தவர்களாயிருக்கின்ருர்கள் தந்தந் தொழில்களுக்குப் போதிய அளவு கற்பதேயன்றி மேலானகல்வியும் அறிவுவிருத்தியும் அவர்களுக்குப் பெரும்பாலுங் குறைவாயே யிருக்கின்றன. Man doth not live by bread alone" என்று விவிலியநூலில் ஓர் அருமை வாக்குண்டு. அதாவது சீவனத்துக்குப் பொருள்தேடுவதே நோக்கமாய் உயிர் வாழ்வோர்களின் வாழ்வு அற்பவாழ்வு என்பதே. மேலான எண்ணமும் முயற்சியுமில்லாத மக்களுக்கும் விலங்குகளுக்கும் பேதமென்ன?

''உளளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து'' என்ருர் நாயனுர்.

ஆங்கிலக் கல்வியிலும் ஆங்கிலப் பழக்க வழக்கங்களிலும் மயங்கி அமிழ்ந்தி நமது அருமைத் தாயாகிய தமிழின் பெருமையை முற்றும் மறந்து பல நூற்றுண்டுகளாய்ப் புகழுஞ் செல்வமும் சிறப்பும் பொருந்தி விளங்கின அந்தத் தமிழ்ப் பெருமாட்டியைத் தெருவில் அலைய விட்டுவிட்டோம்.

"உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளுவமுதூறைக்குந் திருமுத் தமிழ்" என்ருர் கல்லாடனுர். இத்தமிழ்மாது சிரோண்மணியை இனிமேலாவது நாம் ஆதரித்துச் சீராட்டிப் பாராட்டி வந்தாலொழிய நம்மீதுற்ற

வசை தீரவே தீராது. இந்நாட்டிலுள்ள மறுசாதியாரும் பிறநாட்டவரும் எம்மை இழிவுகூறிப் பழிப்பார்கள்.

சிங்களவர்களுக்கென்றால் பாஷாபிமானம் மிகவுண்டு. சிங்களம் தமிழைப்போற் பழைய மொழியல்ல, சிறந்த இலக்கண இலக்கிய முடையதுமன்று, தமிழைப்போற் பரம்பியதுமல்ல. இவ்வுலகில் வழங்கும் பாஷைகளுள் ஒன்றாயினும் பழமையிலே தமிழுக் கொப்பில்லை. வடமொழியாகிய சம்ஸ்கிருதம் பழையதாயினுஞ் சில வித்வான் களொழியப் பேசுவாரில்லை. தமிழோ ஏறக்குறைய இரண்டுகோடி சனங்கள் பேசும் பாஷையாயிருக்கிறது. இலங்கையிலும் வடதேசத்திலும் மாத்திரமல்ல சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியங்களிலும், ஆபிரிக்கா அமெரிக்கா அவுஸ்திரேலியா கண்டங்களைச் சேர்ந்த தூரபூமிகளிலும் தீவுகளிலும் வழங்கிவருகின்றது. இவ்விதச் சிறப்புக்களமையாத சொற்பபாடையாகிய சிங்களத்தைச் சிங்களவர் பொன்னே போற்போற்றிப் பல கல்லூரிகளை யமைத்து ஆதரித்து வருகின்றார்கள். இலங்கா தீபத்தின் தலைநகராகுங் கொழும்பிலும் அதனையடுத்துள்ள கிராமங்களிலும் பிரபல கல்லூரிகளுண்டு. அப்படியே கண்டி காலி களுத்துறை மாத்துறை முதலிய இடங்களிலுமுண்டு. இக் கல்லூரிகளிற் சிங்கள இலக்கண இலக்கியங்கள் மாத்திரமல்ல, புத்தாகமங்கள் எழுதப்பட்ட பாளி அல்லது மகதி (அதாவது மகத தேசத்தில் முன் வழங்கப்பெற்ற பாஷை) யும் அத்தோடு சம்ஸ்கிருதமும பயிலுகின்றார்கள்.

சிலநாட்களுக்கு முன் நமது அற்றேணி ஜெனரலாகிய Sir. அன்றன் பேட்டிரம், அவர்கள் சுதேச கல்லூரிகளையும் அங்கேபாடம் படிக்கும் முறைகளையும் பார்க்கத் தமக்கு விருப்பமாயிருக்கிற தென்று எம்மிடஞ் சொன்னார்கள். மேற்குறித்த கல்லூரிகளிலொன் றிரண்டிற்கு அவரை அழைத்துப்போனோம். அக்கல்லூரிகளிலே நூற்றுக்கணக்கான மாணவர்கள், பத்துப்பன்னிரண்டுவயது தொடக்கம் முப்பது நாற்பது வயதுள்ளவர்கள், துறவு பூண்டு புத்த சங்கத்தைச்சேர்ந்த குருமாரும் அச்சங்கத்தைச்சேர விரும்பிய சீஷர்களும் படிக்கின்றார்கள். மாணவர்களில் அநேகர்கிருகஸ்தர். நம்மவர்களுக்குளோ என்றாற் குருக்கள்மாராவது மற்றவர்களாவது படிப்பை விரும்புவதரிது. பூணூலணிந்தாற் போதும் குருப்பட்டம் பூண்டு கொண்டாற் போதும்.

கொழும்பில் வித்யோதயக் கல்லூரியில் ஏறக்குறைய ஐஞ்ஞூறு மாணவர்களுண்டு. அற்றேணி ஜெனரலுடன் நான் சென்றதினம் ஒருவகுப்பில் வடமொழியில் அலங்காரசாஸ்திரம் போதித்துக்கொண்டிருந்தார்கள். ஒருவகுப்பில் இலங்கைப் பராக்கிரமவாகுச் சக்கரவர்த்தியின் மாதுலரும் விசயவாகு பிரிவென என்னும் பெயர்பூண்ட அக் காலத்துச் சர்வகலாசாலைக்குத் தலைவருமாகிய ஸ்ரீ றகுலதேரர் என்பவராலியற்றப்பட்ட "காவியசேகரம்" என்னும் பழைய சிங்களக் காவியப் பாடம் நடந்தது. மற்றொருவகுப்பில் வடமொழியிற் பாணினி சூத்திரம் எப்படிப் பிரசித்தமோ அப்படிப் பாளிபாஷையிற் பிரசித்தமான மொக்களானருடைய இலக்கணமும் அதற்குச் சிறந்த பாஷ்யமாக ஸ்ரீ றகுலதேரராற் செய்யப்பட்ட பஞ்சிக பிரதீபமும் படித்துக்கொண் டிருந்தார்கள். ஒரு வகுப்பிற் புத்தகுருமாரின் ஒழுக்கங்களையும் நியமங்களையும் குறித்துப் புத்தராற் சொல்லப்பட்ட "விநய பிடகம்" என்னும் பாளிவேதம் பாராயணம் பண்ணினார்கள். மற்

ெருரு வகுப்பில் வடமொழியில் விஸ்வாமித்திர முனிவரது குமார ராகிய சுஸ்ருத முனிவராலியற்றப்பட்ட வைத்தியசாஸ்திரம் வாசித்துக்கொண்டிருந்தார்கள். இக்கல்லூரிகளில் ஆங்கிலம் படிப்பதேயில்லை. உத்தியோகத்துக்குஞ் சீவனத்துக்குமல்ல, கல்வியின் ரசத்தை விரும்பியே படிக்கிறார்கள். இவர்களுடைய படிப்பையும் ஊக்கத்தையுங் கண்டு அற்றேணி ஜெனரல் மிகவும் மெச்சிக்கொண்டார்.

இங்கே கல்வி கற்கும்பொருட்டுப் பம்பாய் காசி பாஞ்சாலம் வங்காளம் முதலிய இடங்களிலிருந்தும் வருவார்கள். இரண்டொரு வருஷத்துக்கு முன் கற்கத்தாவிலே அரசாட்சியாரின் சம்ஸ்கிருத கலாசாலைத் தலைவரும் சிறந்த பிராமண வித்வானுமாகிய சதிஸ் சந்திர வித்யாபூஷணர் இங்குவந்து பாளிபாஷையிலே தத்துவ சாஸ்திரங்கள் படித்தார். விடைகொடுக்கும்பொழுது குருதட்சிணைக்காகப் புத்தகுருமார் பொருள் ஏற்றுக்கொள்வதில்லை யாகையால் ஒரு மகா சபைகூட்டி அருமையான சம்ஸ்கிருதபாடல் தமது குருமேற்பாடி அரங்கேற்றிச்சென்றார். புருமா நேர்பாளம் காம்போதியா யப்பான் சீனம் முதலிய கீழ்த்தேசங்களிலிருந்தும் சேர்மனி ருஷியா அமெரிக்கா முதலிய மேல் நாடுகளிலிருந்தும் பிரபல வித்வான்கள் பாளி சம்ஸ்கிருதத்தில் அரிய நூல்களைக்கற்க இங்கு வருகிறார்கள். இதுவல்லவோ ஒரு நாட்டுக்குச் சிறப்பு. யாழ்ப்பாணம் இப்படியிருந்தாலல்லவா நமக்குஞ் சிறப்பாயிருக்கும். தற்காலம் யாழ்ப்பாணத்துக்கு ஒருவன் வரவேண்டிய காரணமென்ன? ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரவர்களோடு தமிழ்க் கல்வி போய்விட்டது. வடமொழிக் கல்வியோ இல்லை. ஆகமசாஸ்திரப் பயிற்சியில்லை. மேலான ஆங்கிலப் படிப்புமில்லை. அமெரிக்கன் மிஷன் கல்லூரியிற் படித்த தாமோதரம் பிள்ளை அவர்கள் விசுவநாதபிள்ளை அவர்கள் முதலியவர்களே சென்னபட்டினச் சர்வகலாசாலையில் முதல்முதல் B. A. பட்டம் பெற்றவர்கள். தற்காலம் ஆங்கிலக்கல்விக்காக இங்கு வருபவரில்லை. நாட்டுவளப்பம் நகர்வளப்பங் குறைவு, தனங் குறைவு, எல்லாச் செல்வத்துள்ளுந் தலையாய கல்விச் செல்வத்தை முன்போல் வளப்பீர்களாகில் மற்றெல்லாச் செல்வமுஞ் சிறப்புந் தாமே வந்து பொருந்தும். உங்களையும் எல்லோருந் தேடி வருவார்கள்.

உத்தரதேசத்தில் நாம் பல முறை சஞ்சாரஞ் செய்திருக்கிறோம். பம்பாய் கற்கத்தா பிறயாக் முதலிய பகுதிகளில் ஆங்கிலம் படித்தவர்களே தங்கள் தாய்மொழிகளையுஞ் சம்ஸ்கிருத பாஷையையும் விருத்திபண்ணுவதற்கு வெகு முயற்சி செய்கிறார்கள். பழைய நூல்களை வெளிப்படுத்தியும் அருமையான புதிய நூல்களைச் செய்தும் வருகிறார்கள். வங்காளத்தில் எவ்வித உயர்ந்த உத்தியோகத்திலிருப்பவர்களுஞ் சிரேஷ்ட நீதிபதியாயிருந்தாலென்ன மந்திரிமாராயிருந்தாலென்ன நியாய ஸ்தலத்திலுங் கச்சேரியிலுந் தங்கள் தொழில் செய்யும்பொழுதொழிய ஆங்கில பாஷை உபயோகிக்கமாட்டார்கள். தங்கள் தாய்மொழியையே வழங்குதலைவிரதமாகப் பூண்டிருக்கிறார்கள். கற்கத்தா சர்வகலாசாலையிற் படிக்கும் யாழ்ப்பாணத்து மாணவர் சிலர் எம்மை வந்து கண்டபொழுது சர்வ கலாசாலைப் போதகாசிரியர்கள் ரசாயன சாஸ்திரம் சீவசாஸ்திரம் தத்துவசாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களைப் போதிக்கும்போது பெரும்பாலும் வங்காளிப் பாஷையையே வழங்கி வருவார்கள், ஆகையால் நம்மாணவர்களுக்கு அப்போதனையின் முழுப்

பயனும் பெறக்கூடாமலிருக்கிறதென்றுமுறைப்பட்டார்கள். அவ்வாசிரியர்களுடையநோக்கமென்னவென்றால் தங்கள் பாஷையைச் சிறப்புஞ் சங்கையும் அபிவிர்த்தியுமடைவித்தலே. நூறு வருஷத்துக்கு முன்சொற்ப பாஷையாயிருந்தது வங்காளிகளுடைய அபிமானத்தினாலும் முயற்சியினாலும்மேன்மையடைந்து உலகமெல்லாம் பெயர் படைத்த சேர் றவிந்திரநாத்டகோர் முதலிய புலவர்களினாலுஞ் சிறந்த விலக்கியங்களினாலும் விளங்கி வருகின்றது. இங்குமப்படிச்செய்தால் அல்லவா நம் அருமந்த பாஷையும் சீராகும்?

இந்நன்னிலையை அடையுமாறு ஆலோசித்து வழி தேடுவதற்கே நாமிங்குக் கூடியிருக்கிறோம். முதலாவது தமிழபிமானத்தைஉண்டாக்கவேண்டும்; தமிழின் அருமைபெருமையை விளக்கல்வேண்டும். இதுவே நாம் அமைக்கும் மாளிகைக்கு அத்திவாரமாம். இதற்குச் செந்தமிழ்ப் பரிபாலனசபை என்றொரு சபை ஸ்தாபித்துக் கல்வி உத்தியோகம் தனம் செல்வாக்கு முதலியவுடையவர்களை அங்கத்தவர்களாக்கிப் பள்ளிக்கூடங்களில் சந்தைகளில் திருவிழாக்காலங்களிற் பிரசங்கங்களாலுந் துண்டுப்பத்திரங்களாலும் நமது நோக்கங்களைப் போதித்து எல்லோர் மனதிலுஞ் சிரத்தையும் ஊக்கமுங் கிளப்புதல் தக்கவழியாகும். அரசாட்சியரால் நடத்தப்படுங் கிளறிக்கல் முதலிய பரீக்ஷைகளில் தமிழ் ஆவசியகபாடமாக வைக்கவேண்டும். லண்டன் சர்வகலாசாலைப் பரீக்ஷைகளிலே தமிழ்ப்பாடங்கொடுக்க விரும்புவோர் அதைக் கொடுப்பதற்கு இடம்பெறுவதுபோலவே கேம்பிறிஜ் லோகல் பரீட்சைகளிலும் இடம் பெறவேண்டும். பள்ளிக்கூடங்களிற் படிக்குந் தமிழ் நூல்களைப் பரிசோதித்துக் குற்றமுள்ளவைகளை நீக்கி நல்லவைகளை வைக்கும்பொருட்டுத் தக்கவர்களைநியமிக்கவேண்டும், ஆண் பெண் பாடசாலைகளில் நியமித்தற் பொருட்டு ஆசிரியர்களைப்பழக்க நல்ல கல்லூரியொன்று ஸ்தாபித்தல் வேண்டும். மேலும் விசேஷமாக வங்காள தேசத்தவர்களுடைய முன்மாதிரியைப்பற்றி நாமும் ஆங்கில பாஷையிலெவ்வளவு கற்றுத்தேர்ந்திருந்தாலும் எப்பெரு முத்தியோகங்களிலிருந்தாலுங் கோடு கச்சேரிகளில் நம்முடைய தொழிலுக்கு ஆவசியமான நேரங்களிலொழிய மற்றெல்லா நேரங்களிலும் ஆங்கில மொழியை விலக்கி நமது தமிழ்மொழியையே வழங்கும் விரதம்பூண்டு கொள்ளல் வேண்டும். இவ்வித முயற்சிகளை நாம் செய்தாலன்றி நம்முடைய தாய்மொழி சிறப்பும்விருத்தியு மடையாது இது நம்மையெல்லாம் பொறுத்த மிகவும் இன்றியமையாக் கடமையாம்.

பகவான் அர்ச்சுனனைப் பார்த்து அர்ச்சுனா, "நீ தொழில் செய்வதற்கே அதிகாரியொழியத் தொழிலின் பலனுக்கு அதிகாரியல்ல; பலனை நோக்கித்தொழில் செய்யாதே; தொழில் செய்யாமற் சும்மாவுமிராதே" என்றார். இக்கருத்துவைத்தே நாயனாரும்,

"பொறியின்மை யார்க்கும் பழியன்றறிவறிந்தாள்வினை யின்மை பழி" என்றார்.

நாம் எடுத்திருக்குங் கருமம் மேலான நற்கருமமாதலாலுந் தனக்குவமை யில்லாத விறைவனது திருவருளை முன்னிட்டே நாம் இதிற் பிரவேசிப்பதாலும் நம்முடைய எண்ணமெல்லாம் எண்ணியபடியே கைகூடுமென்பது நமது துணிபு.

நாம் யார்

(இவ்வியாசம்: தேவகோட்டை வைசிய சிவானந்த சபையின் மூன்றாவது வருஷநிறைவு விழாக்காலத்தில் திருநெல்வேலி ஸ்ரீமாந். வி. என். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் (B.A., BL.,) ஹைக்கோர்ட்டு வக்கீல் அக்கிராசனத்தில் செய்யப்பெற்ற பிரசங்கச் சுருக்கமாகும்.)

அசிந்தியா வியக்த ரூபாய நிர்க்குணாய குணாத்மநே! சமஸ்த ஜெகதாதார மூர்த்தயே பிர்ஹ்மணே நம: !!

கௌரவம் பொருந்திய அக்கிராசனாதிபதி யவர்களே! சகோதரர்களே!! கனவான்களே !!!

இப்பொழுது இம்மகாசபையிலே பேசும்படி நான் எடுத்துக்கொண்ட விஷயம் "நாம் யார்" என்பதாம். இவ்விஷயத்தைப் பேசும், ஆற்றல் என்னிடத்திலே இல்லாதிருந்தாலும் திருவருட்டுணையையும் சபையிலுள்ளார் அன்பையுந் துணையாகக்கொண்டு சிலமணிநேரத்துட் பேசி முடிக்க எண்ணுகிறேன். பலவிஷயக் குறிப்புக்கள் இவ்விஷயத்திலே வராது போகவுங்கூடும். அவற்றின் பொருட்டு என்மீது குறைகூறாதிருக்கவும் யாவரையுங்கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆத்மா உண்டென்பது

நான் என்பது ஒருமைச்சொல். நாம் என்பது தன்மைப் பன்மைச் சொல். இச்சொற்களை ஒவ்வொருவரும் பேசுகின்றோம். நாம் என்ற வார்த்தையைத் தேகமுள்ள பொழுது கூறலாமன்றித் தேகமில்லாத போது சொல்ல முடியாது. இதனாலே தேகத்தினுள்ளே ஒன்று இருந்து இயக்குவதாகவும், பேசுவதாகவுந் தெரிகின்றதன்றோ! அது தான் உயிர். உயிர், ஆத்மா, இயமானன் முதலிய பெயர்கள் ஒரு பொருளுக்கே வழங்குவன.

இவ்வுயிரையுந் தேகத்தையும் தமது சக்தியினாலே அசைவித்து நடாத்துபவரே கடவுள். கடவுளை, பதி, சிவன், ஈசன் முதலிய திருநாமங்களானே பெரியோர் வாழ்த்திவணங்குவர். இவ்வூனுடற் பற்றுவிட்டால் ஈசனை ஆன்மாக்களடையும்; தடை செய்து பிறவியை மேலும் மேலும் உளவாக்குவது மலம். அது ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். ஆணவமல சம்பந்தம் எப்பொழுதுந் தொடருமியல் புடையது. அது பற்றியே ஆன்மாக்களை அணு என்பர் அறிந்தோர். ஆன்மா என்பதற்கு வியாபக முடையது என்று அர்த்தமாகும். முதல் ஆணவமலத்தினாலே உண்டாகும் அகங்கார மமகாரங்களை விடுதல் வேண்டும்.

அகங்காரமாவது.—நானே எவரினும் பெரியோன் என்று வீண் தருக்குறுதல்,

மமகாரமாவது —எல்லாம் என்னுடையது என்று எண்ணுதல்.

ஆத்மா இதுவென்பது

இப்படி எப்போது நினைக்கின்றோம்? ஆன்மா உள்ளபொழுது நினைக்கின்றோம். எது நினைக்கின்றது? இந்நினைவைச் செய்வதே

ஆன்மா. ஆன்மா இல்லாவிட்டால் ஒருவித சிந்தனையு முண்டாகாது. தேகம் ஆத்மாவன்று. உறுப்புகளும் ஆத்மாவன்று. இந்திரியங்களும் ஆத்மாவாகா. இவற்றிற்கு வேருய்த் தேகத்தை அசைவிப்பதே ஆன்மா என்று முன்னே கூறப்பட்டது. ஆன்மா இல்லாவிட்டால், தேகம் இயங்காது. பிரேதமாகக் கிடப்பது பிரத்யக்ஷமன்றே!

ஆத்மாவும் வேறு; பரமாத்மாவும் வேறு

இங்ஙனம்கூறிய ஆத்மாவையே ஜீவாத்மா என்றும், ஜீவாத்மாவைக் காத்து நல்வழிப்படுத்தற்காகப் பாரபட்சமின்றிக் கன்மத்திற்கேற்பச்சரீரங்களைக் கொடுத்துக் காப்பாற்று பவரையே பரமாத்மா என்றும், ஆன்றமை புலனுடைச் சான்றோர் புகலுவர். பதி ஒருவர், ஆன்மாக்கள் அளவிறந்தன. ஆத்மா சாத்வீகத்துவமான ஆவி. ஆங்கிலத்தில் "அழிவற்ற ஆவி'' என்று ஒருவர் எழுதியிருக்கின்றார்.

ஆத்மாவுடைய பிரமாணம்

பண்டைக்காலத்திலே ஆத்மாவின் பிரமாணங் கூறப்பெற்றதாக எனக்குத் தெரியவில்லை. தற்காலம் அமரிக்காவிலுள்ள தேகாராய்ச்சியிற் கீர்த்திபெற்ற பண்டிதர் ஒருவர் ஆன்மாவின் நிறை "மூன்று அவுன்ஸ்'' என்று கணக்கிட்டு எழுதியிருக்கின்றார்.

ஆத்மலக்ஷணத்தைச் சித்தாந்த வேதாந்த நூல்கள் விரித்துக்கூறுகின்றன. அவைகள், நல்லாசிரியரிடம் பல்லாண்டுபடிப்பினுந் தெவிட்டாத இன்புகாட்டும். நமதுயாழ்ப்பாணத்திலே அவதரித்து இலங்கை இந்தியா ஆகிய ஈரிடங்களினும் அருந்தருமங்களை நிறுவியும்,சைவசமய ஸ்தாபனஞ் செய்தும், செந்தமிழ் விளக்கிய சித்தாந்த வரோதய பானுவாகிய ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானவர்கள் இயற்றிய இரண்டாஞ் சைவ வினுவிடையிலே, கூறப்பட்டதை இங்கே சொல்வது ஆவஸ்யகமாகும். அவையாவன.-

ஆத்மலக்ஷணம்

ஆன்மாக்கள்; நித்தியமாய், வியாபகமாய்ச் சேதனமாய், பாசத்தையுடையவைகளாய், சார்ந்த தன் வண்ணமாய், சரீரந்தோறும் வெவ்வேருய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவைகளாய், தமக்கொரு தலைவனை யுடையவைகளாய்,பிறப்பு இறப்பு உடையவைகளாய் இருப்பன என்பதாம்.

ஆன்மாக்கள் தாமே எல்லாவற்றையும் செய்ய மாட்டா. ஆன்மாக்கள் அடிமை, கடவுள் ஆண்டான். இதனை ஒருவாறு சூசிக்கு முகத்தானே சுந்தரமூர்த்தி நாயனரும் தம்மை யடிமையென்று பாடியருளினர், "மீளா அடிமை யுமக்கே யாளாய்ப்பிறரை வேண்டாதே'' (பாசுரக் குறிப்பு.)

அநாதிநித்திய வஸ்துக்கள் மூன்று

ஆன்மாக்களும், பாசமும், பதியும் அநாதியா யுள்ளன. இக்கருத்தை விளக்கவே நமக்குஉருவத்திருமேனி கொண்டெழுந்தருளி யிருக்கும் ஆலயவழிபாட்டை முதலிலே வைக்கப் பெற்றிருக்கின்றது. ஒரு உருவத்தையும் மனம் பற்றுதிருத்தல் கூடாது. ஒரு உருவத்தில் அமைக்கப்பெற்ற மனம், பின்பு அருவ வழிபாடு செய்வதற்கு எற்றதாகும். ஆலயம்தேகத்தையொப்பாக விளங்கும்அதுசம்பந்தமாக இங்கேவிரியாது திருமூல யோகிகளருளிச்செய்த ஒருபாவைக்கூறி அப்பாற்செல்லுகின்றேன். ஆகம ஆராய்ச்சியுடையார்க்கு இவைகள் இனிது விளங்கும்.

நாம் யார்

"ஆய பதிதா னருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவு மடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய வரனிலை யாய்ந்துகொள் வார்க்கே"

பதிபசுபாசம் என்பன அநாதி என்பதை "பதியினைப்போற் பசுபாசமநாதி" என்ற சதாசிவ ரூபச்செய்யுள் வலியுறுத்தும் நிற்க;

மல மறைப்பினாலே அறிவுருவான கடவுளையும், சுத்த சாத்துவீக ஞகிய தன்னையும் அறிய முடியவில்லை. தன்னை என்றது இங்கேஆத்மா வின்மேற்று. திரோதானசக்தியானது முன்னே மறைத்து நின்று பின் னர்அருட்சத்தியாக மாறும். ஆன்மாக்களைச்சிவத்துடன்சேர்ப்பது திரு வருட்சத்தியாகும். சிற்சத்தி, பிரேரகசக்தி எனச் சத்திபேதங்கள் பல வுள; சக்தி இறைவன் றிருவருளேயாம். அருட்சக்தியை அதிஷ்டித்து நின்று கடவுள் எல்லாவற்றையுஞ் சங்கற்பமாத்திரையானே சிருஷ் டித்தருளுவார். ஆணவமலத்தைக் காணமுடியாது. சில பிரமாணம்,

"அந்தமலமா மறியாமை கண்டாயே
அந்த அறிவுநீ யையனே—தொந்தவிருள்
போனதே யுன்னை விட்டுப் போக்கித் திரோதையரு
ளானதே கண்டா யறிந்து,

வடநூலில்

சிவஸ் சங்கல்ப்பமாத்ரேண பிந்துவேஷாபகரஸ் சதா!
(சிவன் சங்கற்பமாத்திரையானே சிருட்டித்தருளுவர்)

கடவுள் வன்கண்மையில்லாதவர்

இப்படிச் சிருட்டிசெய்து நிர்விகாரியாகிய ஜீவனை வன்கண்மையி னாலே பிறப்பிக்கின்ருரென்று தோஷங் கூறுதல் கூடாது. ஈசுவரனு டைய செயல்கள் யாவும் திருவருளேயாம். எப்படியெனில், ஒருவர் வறி யவரும், ஒருவர் செல்வரும், ஒருவர் அழகுடையரும், ஒருவர் அவலக்ஷ ணமுடையரும், ஒருவர் ரோகியும், ஒருவர் அரோகியும், ஒருவர் அங் கஹீனரும் என்று நாங்கள் பார்க்கக்கூடிய பன்னூறு பேதங்களுங் கடவுளாற் பாரபக்ஷம்பற்றிக் கொடுக்கப்பெருது, அவ்வவ்வுயிர்களின் புண்ணியபாவ வேதுக்களினாலே கொடுக்கப்பட்டனவாகலின் கடவு ளிடத்துள்ள கிருபைத்தன்மை இலகுவி லுணரலாகு மென்க. புண்ணி யம் நற்செய்கையால் வளரும்; விஸ்வாசகாதம், பொருமை, உலோபம், இரக்கமின்மை இவைகளை ஆட்சிப்பண்ணும்மனிதர்கள் எது செய்தா லும் தீமையே வளரும். இது சத்தியம்! சத்தியம்!! முக்காலுஞ் சத்தி யம்!!! பாவந் தீச்செயல்களால் வளர்வது சொல்லவும் வேண்டுமோ? வேண்டாம்! நல்லறமுடையோரையும், தீச்செயல் புரிந்தோரையும் எப் படி உணர்வது என்ருல், திருவள்ளுவ நாயனுர் உத்தரவேதத்தில்

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை'

என்ருராகலி னறியத்தருமென வுரைக்க. இஃது இலௌகிக நிரை யிற் காட்டப்பெற்ற உதாரணமேயன்றி, வைதிக பக்திமார்க்க சூசகம ன்று. அஃதாவது திருஞான சம்பந்த சுவாமிகளை அப்பர் சுவாமிகள் வேறுபாடின்றி வணங்கியதும் திருஞான சம்பந்த சுவாமிகளிவர்ந்து

வந்த பல்லாக்கைத் தாம் தாங்கிச் சென்றதும் சிவஞானவழித்தான செயலாகலின் ஆத்மஞானம் கிஞ்சித்துமில்லாது, அகங்காரப் படுகுழியிலும், மங்கையரினலத்திலும் மனதை வீழ்த்தி, உலகப்பற்று விடாது அலையும் எங்கள்செயலுக்கு அஃது ஓரணுவளவேனு மொப்புவதன்றென மறுக்க.

கடவுள் எங்கும்வியாபகராயிருக்கிறார் அவருடைய கிருபை யாவரிடத்துமுண்டு. பக்குவமடைந்த ஆன்மாக்கள் மோக்ஷமடைவர். மோக்ஷம்=விடுதல். முச்-என்பது தாது, முன்னே மோக்ஷமடைந்தோர் பலர்; தற்காலமடைகின்றோரும் பலர்; இன்னும் மோக்ஷத்தைப் பெற நிற்போரும் பலரே.

உபமானம்

ஒரு தடாகத்திலுள்ள தாமரை அரும்புகளிலே சூரியரஸ்மி சரிவரப்பட்டாலும், அவற்றுள் அலரும் பக்குவமுடையதேமுதன்முதல் விரிகின்றது. அதுபோல, இறைவனுடைய திருவருள் எல்லா ஆன்மாக்களுக்கும் இருந்தாலும, சிற்சத்திபதிந்த அதிதீவிரதரநிலையுடைய ஆன்மாக்களே மோக்ஷமடையுமென்பது தெளிவாகும். இதனாலே ஈசுவரனுடைய காருண்ணியத் தன்மையு முணரலாம்.

'பகலலர்த்துந்தாமரை நேரொாத்து' என்பது ஆப்தமூர்த்தி திருக்கரத்துச் சிவஞானபோதம்.

சிவனே நிமித்தகாரணர்

பூமியில் சகல ஜீவகோடிகளுக்கும் சூரியகிரகணம் இன்றியமையாததுபோல, சமஸ்த சராசரங்களுக்கும் மூலகாரணராகிய :சிவபெருமானுடைய திருவருள் முக்கியமானதாம். அவருடைய அருட்பிரகாசமில்லா விட்டால் உலகத்தில் ஒன்றும் விருத்தியடையமாட்டது என்பது உண்மை நூற்றுணிபு. ஆன்மாக்களுக்குக் காட்சிப்பொருளாவாரும் காட்சியாவாரும் பதியே. காண்பான் ஆத்மாவே. ஆத்மாக்காண்டல் திருவரு ளில்வழிக் கூடாது.

பிரபல பிரமாணங்கள்

தௌபர்மஸாமரஸ்யேந சமஸ்தஜெகதாத்மகௌ (அபியுக்தர்)

தர்ஸோதர்ஸ யிதாசாத்மா தஸ்யாதர்ஸ யிதாசிவ தஸ்மாத் தஸ்மி ந்பராம்பக்தி ம்குர்யாதாத்மோ! பகாரகே!! (சிவஞான போதம்)

"அவனருளே கண்ணுகக் காணினல்லால்"

'காண்பாரார்கண்ணுதலாய் காட்டாக்காலே' (திருவருட்சுருதி)

காண்பவன் முதலியதிறமுங்காட்டுவான்
மாண்புடையோனுமாய் வலிகொள்வான்ஞெடர்
பூண்பதின்றாய் நலம்புணர்க்கும்புங்கவன்
சேண்பொலிதிரு நடசெயலையேத்துவாம்.

சேண் =சிதாகாசம். அஃதே திருச்சிற்றம்பலம்.

(கசசியப்பசிவாசாரிய ஸ்வாமிகள்)

நன்மை தீமைகளை விசாரியாது ஒன்றைப் பற்றிக்கொள்ளுதலும், எது சொன்னாலுங் கேட்டபொழுது மாத்திரம் உடன்பட்டுப்பின்பு மறுத்தலும், இன்னது செய்வதெனச் சிலபோது தெரியாது மயங்குதலும் மனதின் சுபாவமாகும். (தொடரும்)

யாழ்ப்பாணம், வ. மு. இரத்திநேஸ்வரையர்.

பிரதாபன்

அல்லது

நட்புமுறை பிறழ்ந்த நண்பன்

பதினேழாம் அத்தியாயம்

நன்றியற்ற நண்பன்

இரண்டு வாரங்களாயின. ஒரு நாள் மாலை சித்தூர் துர்க்கத்தின் மத்திய அறையில் பிரதாப்ஸிங், வீர சேனன், ஜயமாலை, பிரதாபன், ரணவீரஸிங் முதலியோர் ஆழ்ந்தயோசனையிலிருந்தனர். அவ்வறையின் சுவரில் வெற்றிபெற்ற ரஜபுத்திர வீரரின் யுத்தஆயுதங்களும், பகையரசரின் மண்டையோடுகளும் சமர்க்களங்களிலிருந்து கொணர்ந்த கொள்ளைப் பொருள்களும் அக் காலத்திய வேலைப்பாடமைந்த தந்தப் பலகைகளும்,சமாதான உடன்படிக்கைகள் வரையப்பெற்ற செப்பேடுகளும் வரிசைவரிசையாய்மாட்டப் பெற்றிருந்தன.

அவைகளைப் பார்த்தமாத்திரத்தில் மீவார் நாட்டுவாசிகள் அனைவரும் தங்கள் முன்னோரின் யுத்த சாமர்த்தியத்தை நினைவுகூர்ந்து தாங்களும் அவர்களைப் போலிருக்கமுயல்வது மன்றி யுத்த சமயங்களில் சுதேசாபிமான மென்னும் ஆவேசங்கொண்டு சமர்க்களம் புகுந்து கைவன்மையால் பலரைச் சுவர்க்கம் புகுத்துவர்.

பிரதாப்ஸிங்:—அந்தோ! எந்தை உதயஸிங்கர் இச்சமயத்தில் நம்மைக் கைநெகிழவிடுத்து எங்ஙனோ ஓடி மறைந்தார். அவற்கும் ரஜபுத்திர பிரபுக்களுக்கும் இக்காலத்திலா பிரிவினை ஏற்படவேண்டும். நமதுகெட்டகாலம் இருந்தவாறு என்னே! ஆஹா, அவருடைய சமயோசித புத்தி சாதுர்யமே நம்மை எல்லாவித ஆபத்திலிருந்தும் காக்கவல்லது. ஏ, பவானி தேவீ! அவர் இருக்குமிடத்தையாகிலும் எங்களுக்குக் காண்பிக்கலாகாதா, என்று கூறி துக்கசாகரத்திலாழ்ந்தனன். அவ்விட முழுவதும் சிறிது போழ்து அமைதலாயிருந்தது.

அத்தருணத்தில் ஜயமாலை தமது ஆசனத்தை விட்டெழுந்து பிரதாபஸிங்கனை முதுகில் தட்டி, இளவரசே! நீர் இன்று ரஜபத்திரவீரர் பேசுவதுபோல் பேசவில்லை. ஆபத்தில் அதைரியப்படலாமா. அஃது ஆண்மகனுக் கழகாமோ?—என்ன செய்வது. கடந்த விஷயங்களைக் கருதி வருத்தப் படுவதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை. இராச்சிய பாரந்தாங்கி யாவரும் புகழ்ந்தேத்த நல்லரசாட்சி செய்யவல்ல நீர் இவ்விதம்அதைரியப்படலாமா? இனி நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி நினைத்தல் அவசியம் என்றுகூறி மறுபடியும் ஆசனத்தில் அமர்ந்தார்.

வீரசேனன்:-ஆம், மஹாராஜ்! நேற்றைத்தினம் நமதருங்கண்களும் செவிகளுமாகிய ஒற்றர், அக்பர் நமக்கு விரோதமாய்ப் படையெடுத்து வர இருப்பதைப்பற்றி கூறியதைமறந்து விட்டீரோ. மொகலாயரை அடியோடே தொலைக்கவேண்டுவது அவசியமென்பதை நீர்அறியாதொழிந்த;தென்?—மஹாராஜ்! நமது யுத்தாவேசமென்னும் அக்கினிச் சுவாலைமுன அவன் சேனாசமுத்திரம் வற்றிவிட வேண்டியது தானே.

ரணவீரஸிங்:—ஜயமாலை வீரர் இருக்கும்வரையில் நாம் எதிலர் மீது வெற்றி யடைவது உள்ளங்கை நெல்லிக் கனியன்றோ! பவானி

The Copy-right of this Novel belongs to its author N. Nagabushanam.

தேவியும் பட்டய வன்மையும் நமதுபக்கத்துணையாய் இருக்கும் வரையில் நமக்கென்ன குறை, மஹாராஜ்!

பிரதாபன்:---மஹாராஜ்!---என்னரும் நண்பன் வீரசேனன் இந்நாட்டைக் காக்கும்பொருட்டுச் செய்துள்ள ஏற்பாடுகளை நீர் அறிந்தால் இவ்விதம் அதைரியப்படமாட்டீர்.

பிரதாப்ஸிங்:---அக்பர் சித்தூரைப் படையெடுத்து வந்தான் என்று கேள்விப்படும் அந்த க்ஷணமே எந்தை உயிருடனிருப்பின் ஓடோடியும் வந்து நம்மைக் கலந்து கொள்வார், யாதொரு சந்தேகமு மில்லை.

ஜயமாலை:---அரசே! நீர் சொல்வதற்குமுன்பே என் கட்டளையின் பேரில் வீரசேனர் ரஜபுத்திர யுத்தவீரரைத் தயாரித்துவிட்டார். இப்புராதன துர்க்கத்தின்பழுது பார்த்தாய் விட்டது. நாம் அக்பருக்குஅஞ்ச வேண்டுவதில்லை.

பிரதாப்ஸிங்:-ஜயமலைவீரரே! உமது துரிதத்திற்கு மிக்க வந்தனம்.

சபை கலைந்தனர். பிரதாபன் அவ்விடத்தை விட்டு நீங்கி அதற்குச் சிறிது தூரத்திற்கப்பாலிருந்த ஒரு சிற்றோடையின் அருகே உட்கார்ந்து பின் வருமாறு யோசிக்கலாயினன்.

"ஆஹா, வீரசேனனின் அதிகஷ்டத்தை என்னென்றுரைப்பது! ரஜபுத்திரர் அவனைப் போற்றுகின்றனர். இந்நாட்டில் அவனை அறியாதவர் எவருமிலர். எடுத்துரைக்க இயலாத வனப்புவாய்ந்த நங்கையை தன் கைவசப்படுத்திவிட்டான் கட்டாயம் அவளை மணம்புரிந்துகொள்வான். ஹீராபாய் தன்னுயிரினும் மேலாக அவனைப் பாவிக்கிறாள். (மௌனம்)

"எவ்விதத்திலாகிலும் அவள் மனத்தைக் கலைத்து அவளை நான் வதுவைசெய்து கொள்ளவேண்டும். இவள் அழகின்முன் லலிதை எம்மாத்திரம்; ஹீராபாய் என்னும் விளக்கின்முன் லலிதை மின்மினிப் பூச்சன்றோ! (மௌனம்)

"ஆம், ரணவீரஸிங் ஹீராபாயைக் காதலிக்கிறான் அக்காதல் விஷயமாய் அவனுக்கும் வீரசேனனுக்கும் சிறிது மனஸ்தாபம் நேரிட்டிருக்கிறது; அம்மனஸ்தாபத்தை நான் அதிகப்படுத்தி, "காத்திருந்தவன் பெண்சாதியை நேற்றுவந்தவன் கொண்டுபோனதுபோல்" அவளைக்கவர்ந்து செல்லவேண்டும்" என்று நிர்ணயஞ் செய்து கொண்டு இருட்டானதும் கோட்டையை நோக்கிச் சென்றான்.

பதினெட்டாம் அத்தியாயம்

ஓர் உண்மைக் காதலியின் மனோதிடம்

பிரதாபன் காவிரிப்பூம் பட்டணத்தை விடுத்து திங்களொன்று சென்றது. ஒருதினம் மாலை லலிதை உத்தியான வனத்திலுட்கார்ந்து பிரதாபனை நினைத்து நினைத்து மனம் வருந்திக்கொண்டிருந்தாள்.

"என் காதலர் எவ்வாறிருக்கின்றாரோ, அவரென்னை விட்டுப்பிரிந்துசுமார் ஒருமாதகாலமாயிற்றே, எனக்கு நிருபமொன்றும் எழுதிலரே அவர். ஆஹா, அவர் மனம் கல்லோ. என்னை மறந்துவிட்டார்போலும். ஒருவேளை, ராஜபுதனத்திற்குப் போகிற மார்க்கத்தில் அவரைத் துஷ்டமிருகம் யாதாயினும் கொன்று விட்டதோ—என்னவோ தெரிய

வில்லை. சீ! சுத்த வீரராகிய அவரா துஷ்டமிருகங்களுக்கிரை யாவர்? அவ்விதம் நான் நினைக்கவே மாட்டேன். (மௌனம்)

"அவரை நான் கண்ணாரக்கண்டால் என் சந்தேகம் நிவர்த்தியாகும். ஆம், அவரை நான் எவ்விதத்திலாகிலும் பார்க்கவேண்டும். அந்தோ இவ்விடத்திலிருந்து ராஜபுதனம் அதிக தூரமிருக்கிறதே வழியெல்லாம் காடுகளாம். துஷ்டமிருகங்கள் வழியில் என்னை என்ன செய்யுமோ. (மௌனம்)

பயமென்ன? வருவது வழியில் நிற்கப்போகிறதில்லை. பக்திமிகுந்த புண்ணியவான்கள் திவ்விய ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்கையில் தேக இளைப்பை ஒருபொருட்டாகக் கருதுகின்றனரோ? அஃதே போல் பிரதாபனென்னும் என் தெய்வம் எழுந்தருளியிருக்கும் ராஜ புதனத்திற்கு யாத்திரை செய்ய காதலென்னும் பக்தி மிகுந்துள்ள நானேனோ அஞ்சுவது அஞ்சேன் ஒருக்காலும் அஞ்சேன். (மௌனம்)

"இன்னும் ஒருவாரம் பொறுத்துப் பார்க்கலாமா, சட் இனி நான் பொறுக்க முடியாது பிரதாபவீரரின் கண் பார்வையே என்னுடலைக் காக்கும் உணவு, அவ்வுணவை அருந்தி உயிர் பெற்றிருப்பதே என் கடன். (மௌனம்)

"ஆ காதலைக்கட்டி அடக்க வல்லார்யார்! ---அது அடக்க அடக்க அதிகமாகி விளங்குமன்றோ---ஓடும் நதியைக்கரை கட்டித்தடுத்தால் அதில் ஜலம் பெருகி அக்கரையை உடைத்துப் புரண்டோடுவது சகஜமல்லவா?

"நான் அவரைக் கட்டாயம் பார்க்கவேண்டும். அவர் அருகில் இருப்பதே எனக்குமோக்ஷம். அதினும் மேம்பட்ட சுகம் இவ்வுலகிலிருப்பினும் அதை நான் வேண்டேன் பிரதாபரைப்போன்ற சுத்தவீரர் இவ்வுலகில்எவர் உளர்; சத்தியந்தவறாத சுபாவம் வாய்ந்தவர். அவர் என் மீது வைத்துள்ள காதல் கல்லைப்போல் கரைந்துருகாது நிற்கும்தன்மைவாய்ந்தது. அப்புண்ணிய புருஷரைவிட்டுப்பிரிந்திருக்க நான் சகியேன், சகியேன். நான் நாளைத்தினமே ஆணுடை தரித்து எவருமறியாமல் இந்நகரை விட்டுநீங்குவேன். எந்தைக்கு மாத்திரம் நிருபமொன்று வரைந்து என் தலையணைக்கடியில்வைத்து விட்டுச் செல்வேன்" (மௌனம்)

"நான் இவ்விதம் செய்தால் உலகம் என்னைப்பற்றி எவ்விதம் நினைக்கும்; நினைப்பதை நினைத்துக்கொள்ளட்டும். நான் என்னருங் காதலரைத்தேடி ராஜபுதனத்திற்குச் செல்வதில் அவருக்கு மனவருத்தமுண்டாகாவிடில் அதுவே எனக்குப் போதுமானது. இனி நான் தாமதித்தில் கூடாது" என்று தனக்குள் தானே பேசிக்கொண்டாள்.

பதினொன்பதாம் அத்தியாயம்

சதியாலோசனை

நான்காமத்தியாயத்தில் கூறியுள்ள வக்ரகிரி குன்றின் மீதிருந்த சாருணி தேவியின் கோயிலுள் சுமார் இரவு ஒன்பது மணிக்கு இருவர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். கோயிலின் உட்பிரகாரம் எல்லாம் ஒரே இருட்டாயிருந்தது. ஆகாயமுழுவதும் இருண்ட மேகத்தால் மூடப்பெற்றிருந்தது அந்தினம் காற்றும் மழையும் இடியும்மின்னலு மிகுந்திருந்தது.

இவ்விருவரில் ஒருவன் மற்றொருவனை நோக்கி, "நண்ப! உன் நன்மையைக்கருதியே நானுன்னை இங்கு வரவழைத்தேன். இரண்டுமூன்று நாட்களுக்கு முன்பேநான் உன்னெண்ணத்தைக்கண்டேன்" என்றான்.

மற்றவன்;--என் எண்ணம் யாது?--அதை நீ எவ்விதங் கண்டுகொண்டாய்? நெஞ்சாழத்தை அறிந்து கொள்வது அரிதினும் அரிதே.

முதலாமவன்:---நீ நேற்றைத்தினம் அதிகாலையில் உன்சிநேகன் பீமஸிங்குடன் வீரசேனனைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததை நினைத்துக்கொள். அவனை எவ்விதத்திலாகிலும் கொன்று ஹீராபாயை மணந்து கொள்ளவேண்டு மென்று நீ வைத்திருந்த எண்ணத்தை அன்றைத்தினம் அவனுக்கு வெளியிட்டா யல்லவா?

மற்றொருவன்:---ஆம், நீ அதை எவ்விதந்தெரிந்து கொண்டாய்? பிரதாப், எனக்குத்தெரியச் சொல்.

பிரதாபன்;---ரணவீரஸிங், நீ கொண்டஎண்ணம் நியாயமானதே. வீரசேனன் வேற்றூரான். நீயோ ஹீராபாயின் சுற்றத்தான்; ரஜபுத்திரன். அப்படியிருக்க அவள் உனக்குரியள், நீ அவளுக்குரியவன். மேலும், ஜயமாலையோ அம்மங்கையை உன்னைத்தவிர்த்து வேறொருவருக்கும் விவாகஞ் செய்து கொடுக்கமாட்டார் ஆனால், இப்போது அவன்மீது அவருக்கிருக்கும் அன்பையும் விசுவாசத்தையும் நோக்குமிடத்து அவளை அவனே மணம்புரிந்து கொள்வான் போலிருக்கிறது.

ரணவீரசிங்:—அவனைக் கொன்றொழிய என்னெண்ணம் நிறைவேறாது. அது நிச்சயம்.

பிரதாபன்:—கொல்வதில் பிரயோசனமில்லை. அவன் இறந்தால் சித்தூர் துர்க்கம் கட்டாயம் பகைவன் கையில் அகப்பட்டு விடும். சுவாதீனம் இழந்தபிறகு ஒரு மனிதனுக்குச் சுகமேது. நீ ஹீராபாயை மணம்புரிந்து கொண்டும் உனக்குச் சுகமிராது.

ரணவீரஸிங்:—அப்படியானால் நான் செய்ய வேண்டுவதென்ன?

பிரதாபன்:—வீரசேனன் ஹீராபாயைக் காதலிக்கும் விஷயத்தை ஜயமாலைக்குத் தெரிவித்து நீ அவளைக் கலியாணஞ் செய்து கொள்ள பிரயத்தனப்படு

ரணவீரஸிங்:—அவ்விதமே செய்கிறேன்.

இவர்கள் பேசிமுடியும் வரையில் வெளியே ஓயாமல் மழைபொழிந்து கொண்டிருந்தது. அவ்விருவர் சம்பாஷணை முடிந்தது. மழையும் நின்றது. அவர்கள் அக்காளிகோயிலை விட்டு வெளியே சென்றனர்.

போகும் வழியில் பிரதாபன், "சரி, இது எவ்வாறாகிறது பார்ப்போம் இனி ரண வீரஸிங்குக்கு வீரசேனனின்மீது துவேஷம் அதிகமேற்படும். அத்தருணத்தில் என்னெண்ணத்தை நான் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். நாளைய தினத்திலிருந்து நான் அவள் மனத்தை என் வசந்திருப்பிவிட முயல்கிறேன். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். பெண் புத்தி பின்புத்தி தானே. என்னெழில் வதனத்தைக் காண்டலும் அவள் காதல் முறை பிறழ்ந்து நடப்பாளென்பதற்கு ஐயம் சிறிதுமில்லை." என்று யோசித்துக் கொண்டே சென்றான்.

ரணவீரஸிங் பிரதாபனுள்ளத்திலிருந்த மர்மத்தைத்தெரிந்துகொண்டானில்லை. பிரதாபன் நட்பு முறை பிறழ்ந்தநண்பனென்றும் காதலிக்குத் துரோகம் கருதிய காதலன் என்றும் அவன் அறிந்தானில்லை.

(தொடரும்) நா. நாகபூஷணன்.

ஜெயவீரன்

அல்லது

பழிக்குப் பழி

முதல் அத்தியாயம்

சுரங்கம்

சென்னையை நோக்கி ரெயில்வண்டி தூத்துக்குடியிலிருந்து பிரதிதினம் புறப்பட்டு வருகிறதல்லவா? அப்படிப் புறப்பட்டுவரும் வண்டி ஒருநாள் மதுராந்தகத்தைக் கடந்து விட்டது. வண்டியிலிருந்த ஜனங்களெல்லாம் "இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி சென்னை போய்ச்சேரும்; நாமும் வீடுபோய்ச் சேருவோம்; நம்முடைய பயணமும் இப்பொழுது முக்காலே மூன்று வீசம் முடிந்து விட்டது" என்று சொல்லிக் கொண்டு அதிக சந்தோஷமாக இருந்தார்கள்.

அப்படி அவர்களெல்லாம் சொல்லிச் சந்தோஷிக்கும்படி வந்த வண்டித்தொடரின் நடுவில் இரண்டாம் வகுப்பு வண்டி ஒன்று இருந்தது. அதில் சற்றேறக்குறைய நாற்பது வயதுள்ள ஆண்பிள்ளை ஒருவனும் பதினைந்து பதினாறு வயதுடைய வாலிபன் ஒருவனும் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் தந்தை மகன் என்னும் முறையுடையவர்கள். அந்த இரண்டாம் வகுப்பு வண்டியில் அந்த இருவரைத்தவிர வேறு பிரயாணிகள் ஒருவரும் இல்லை அதனால் அவர்கள் தனித்தனியே ஒவ்வொரு படுக்கையின்மீது உட்கார்ந்து தூங்கிவிழுந்து கொண்டிருந்தனர்.

அவர்களுள் மூத்தவன் சரீரம் திரண்டு உருண்டு இருக்கும். அவனுடைய முகமோ சிறிது கடுகடுத்ததாகக் காணப்படும். அவனுக்குப் புத்தி கூர்மையும் மனோதிடமும் அதிகமாகவுண்டு.

அவனெதிரே கள்வர் முதலிய பகைவர் அஞ்சி அடங்கி ஒடுங்கி நடுங்கி நிற்பர். அப்படி அவர்கள் அடங்கி ஒடுங்கி நிற்பதற்குக் காரணம அவன் சென்னை ராஜதானி முழுவதும் மதிக்கத்தக்க துப்பறியும் போலீஸ் வீரனாக விளங்கியிருந்ததே. மகாதேவன் என்னும் அவன் பெயரை மொழியக் கேட்ட மாத்திரத்தில் களவுடையவர்களெல்லாம் கரந்து உறைவார்கள்;

வஞ்சகர்களெல்லாம் அஞ்சி நிற்பார்கள்; துஷ்டர்களெல்லாம் கஷ்டப் படுவார்கள்.

அந்த மகாதேவனுக்குப் பல பகைவருண்டு. அவர்களெல்லாம் அவனைத் தொலைக்கப் பல தந்திரங்கள் செய்து பார்த்தார்கள். அந்தத் தந்திரங்களில் ஒன்றாலும் அவனைத் தொலைக்க முடியவில்லை. நேர்மையுடையவனை எளிதில் வெல்ல ஆகுமோ. நீதிநெறி பிறழ்ந்த ஒருவனை எளிதில் வெல்ல முடியும் இவனை வெல்லுதல் ஆகாத காரியம் எனக் கண்டறிந்த சில கள்வர் "நல்ல பாம்பினைக் கையிற் பிடித்தாலும் பிடிக்கலாம், மகாதேவனைத்தொட நம்மாலு மாகாது, நம் பாட்டன் மாராலும் ஆகாது'' என்று சொல்வதுண்டு.

அவன் மகன் ஜயவீரனும் உருவம், சாயல், உடை, நடை முதலியவற்றில் தந்தையைப போலவே காணப்படுவான் ஆனால் அவன் சரீரம் மாத்திரம் அப்படிக் காணப்பட்டது.

"ஊர் நெருங்கி விட்டது ஜயவீரா'' என்று தன் கண்களைத் திறந்து பார்த்துத் தன்மகனிடங் கூறயத்தனிக் கையில் அவன் உறங்குவது தெரியவந்தது. அப்பொழுது, "பாவம்! சிறு பையல்! இவ்வளவு தூரம் வண்டியில் வந்த அலுப்பினால் கண்ணுறங்கினான்'' என்று சொல்லிக்கொண்டே வண்டியின் பலகணியை (ஜன்னலை)த்திறந்து வெளியே எட்டிப்பார்த்தான். வெளியில் ஒரு இருளாக இருந்தது.

அவன் மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றின. அவை இனியனவுமல்ல; ஒரு விஷயத்தைப் பற்றியனவு மல்ல. அவன் அப்போது சென்னைக்குப் போகும் காரணத்தைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். ஒரு குற்றவாளியின் விசாரணையில் தான் சாக்ஷியம் சொல்வதற்காகவே திருநெல்வேலியை விட்டுச் சென்னைக்குப் புறப்பட்டான். அக்குற்ற வாளியோ கொலை களவு என்னும் இருவித குற்றங்களையும் புரிந்தவன். அவனுடைய கேஸ் சென்னையிலுள்ள பெரிய நீதித் தலத்தில் விசாரிக்கப் படுவதாகக் குறித்திருந்தது. அக்குற்றவாளி செய்த காரியத்தைப்பற்றி மகாதேவன் சாக்ஷியம் சொல்வது தான் தாமதம். அவன் சொன்னவுடன அக்குற்றவாளி மரண தண்டனை பெறுவது நிச்சயம்.

ஆனால் மகாதேவன் திருநெல்வேலியை விட்டுப் புறப்படுகையில் அவன் கைக்கு எட்டிய கடிதத்துண்டானது இருள்

சூழ்ந்த வெளியைக்கண்ட மாத்திரத்தில் அவனுக்குக் கலக்கத்தினை உண்டுபண்ணி விட்டது. அக்கடிதம் திருநெல்வேலியிற் கிடைத்தபொழுது அதன் உள்ளுறையைப்பற்றி அவன் கவலைப்பட வில்லை அதை இரண்டொரு முறை வாசித்து விட்டுத் தன் சட்டைப் பையிற்போட்டான். புகைவண்டி சென்னையை நெருங்கி வரவர அந்தக் கடிதம் குறித்துள்ள விஷயத்தினைப்பற்றிக் கவலை முளைவிட்டுத் தோன்றி வளர்ந்து கொண்டேவந்து அச்சம் என்னும் பழத்தினைத் தந்தது. உடனே பையிற் போட்ட அக்கடிதத்துண்டினை மறுபடியும் படித்துப் பார்க்க வேண்டும் என்னும் எண்ணம் தோன்றினது. அதனால் அவன் பையிற் கையிட்டுக் கடிதத்தினை வெளியிலெடுத்துப் பிரித்து விளக்கொளியிற் பார்த்தான். அதில், "குரு சாமிக்கு விரோதமாகச்சாக்ஷி சொல்ல வேண்டும் என்னும் எண்ணத்தோடு நீ திருநெல்வேலியை விட்டுப் புறப்பட்டாலும், லக்ஷ்மி செட்டி குறித்து வைத்திருந்த படத்தை எங்களிடஞ் சேர்ப்பியாமல் இருந்தாலும் நீ கொலை யுண்பாய் உன்னைக் கொலை செய்வது நிச்சயம். உறுதியாக நம்பு.

இப்படிக்கு,

கூட்டத்தார்.

என்று எழுதப்பட்டிருந்தது.

இவ்விதமான பல எச்சரிக்கைத் துண்டுகள் இதற்கு முன்னர் பல முறைகளில் வந்திருக்கின்றன. அச்சமயங்களி லெல்லாம் மகாதேவன் அஞ்சவில்லை. இம்முறை மாத்திரம் சற்று அஞ்சினான், மனங்கலங்கினான். ஆபத்தொன்று தனக்கு விரைவில் நேரிடப்போவதாக எண்ணினான். உடனே, தன் மனம் தேறுதலடைய, "சீ! ஏன் இப்படி அஞ்சுகிறாய், நடுங்குகிறாய்? மனமே, 'மகாதேவ' னென்றால் கூட்டத்தாரெல்லாம் கருடனைக்கண்ட பாம்பினைப்போல நடுங்கார்களோ? அந்தத் திருட்டுப் பையல்களுக்கோ இவ்வளவு நடுக்கம்? சீ, சீ! என்னை அவர்கள் நெருங்கார்கள். நெருங்க அவர்களுக்குப் பித்துப் பிடித்திருக்கிறதோ? என்னிடத்திலிருக்கும் நேர்மை என்னும் அக்கினி அவர்களை அண்ட விடுமோ? என்று சொல்லிக் கொண்டு அந்தக் கடிதத் துண்டினை எடுத்து மிகுந்த கோபத்துடன் கிழித்துப் பலகணியின் வழியாக வெளியில் எறிந்தான்.

அதே சமயத்தில் வண்டி திடீரெனச்சிறிது தூரம் பின்னுக்குச்சென்று இரண்டொரு நிமிஷம் நின்று, மறுபடியும் மெதுவாக முன்னேக்கிச் சென்றது.

வண்டித்தொடர் திடீரென்று நின்றதாலுண்டான அதிர்ச்சியினுற் கூட ஜயதேவன் கண் விழிக்கவில்லை.

வண்டி நின்றதற்குக் காரணம் யாது என்றறிய, மகாதேவன் பலகணியின் வழியாகத் தலையை நீட்டி வண்டி செல்லுந் திசையை நோக்கினுன். சற்றுத் தொலைவில் ஆபத்துக்கு அறிகுறியான சிவப்பு விளக்கொளி பிரகாசிப்பது தெரிய வந்தது.

மகாதேவன் இப்படிக் கீழண்டைப் பல கணியின் வழியாக வெளியில் உற்று நோக்கிக்கொண்டு நிற்கையில் மேலண்டைப் பலகணியின் வழியாக இரண்டு கொடியவர் வண்டியினுள் தமது பார்வையைச் செலுத்தினர். உடனே அவர்கள் வண்டியின் புறத்திலிருந்த பித்தளைப் பிடியைப் பற்றிக்கொண்டு மெல்லெனக் கதவைத் திறந்தார்கள்.

அதனுல் அதிக ஓசை உண்டாகவில்லை. அப்படியிருந்தும் அதி ஜாக்கிரதையுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர் பொருக்கெனத் திரும்பிப் பார்த்தார். பார்த்து என் செய்வது? உள் நுழைந்த இருவரில் ஒருவன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து தன் கையில் வைத்திருந்த வைரம் பொருந்திய கழியினுல் மகாதேவர் மண்டைமீது ஓங்கி யடித்தான், இரண்டொரு நிமிஷம் வரையில் அவர் கண்ணைத் திறவாது அசைவற்றிருந்தார். பிறகு மிகுந்த வருத்தத்தோடு கணைத்துக்கொண்டு தன் வலது கரத்தைச் சற்று உயர்த்தினுர். அப்பொழுது மற்றோரடி அவர் மண்டையில் விழுந்தது. அவ்வளவு தான்! மகா தேவர் பிணமாக வண்டியிற் சாய்ந்து விட்டார்.

"தொலைந்தான் நடிப்பையல்!" என்று அவ்விருகொடியரில் ஒருவன் மற்றவனைப் பார்த்துச் சொல்லிவிட்டு, "குருசாமியைத் தூக்கிலிருந்து மீட்க இனித்தடை யிருக்குமோ?" என்று கேட்டான். (இன்னும் வரும்.)

சே. சோமசுந்தரம் பிள்ளை,
சென்ற் பீட்ஸ் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்,
மயிலாப்பூர்.

சிறுவர் சிறுமிகளுக்கான பக்கம்

நல்லொழுக்கத்தைப்பற்றிய விதிகள்

(1) நாம் எப்பொழுதும் உண்மையையே பேசவேண்டும். மெய் பேசுவது ஆண்மையான தன்மை, பொய் சொல்வது வீரமில்லாத குணம். நம் பேச்சுகளை ஒருவர் சந்தேகிக்கும்படியாய் பேசலாகாது. ஒரு புளுகன் நிஜம் பேசினுல் கூட நம்பப்படுகிறதில்லை.

(2) ஆணையிட்டாவது அல்லது கீழ்மையானவும் கெட்ட பேச்சுகளையும் பேசியாவது நம்முடைய நாக்கை அசுத்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. அப்பேர்பட்ட பேச்சு பேசுபவர்களுடனும் நாம்சேரலாகாது. கெட்ட வார்த்தைகளைப் பள்ளிக்கூடத்திலாவது அல்லது தெருவிலாவது உபயோகிக்காமல் விட்டுவிடுவதற்கு நம்மால் கூடியவரையில் பிரயத்தனம் செய்யவேண்டும்.

(3) பேச்சுக்களிலாவது, செய்கைகளிலாவது முரட்டுத்தனமாயிருக்கக்கூடாது. வீட்டிலேயும், தெருவிலேயும், பள்ளிக்கூடத்திலேயும் சாந்தமான நடத்தைகளோடிருத்தல் நல்லொழுக்கத்திற்குறிய அடையாளங்கள். சப்தம் உண்டாகும்படி கனமாய் நடக்கிறது, கதவுகளைப்படாரென அறைகிறது, அதிக இறைச்சலோடு அல்லது அதிவேகமாக அல்லதுமிதமில்லாமல் பேசுகிறது ஆகிய இவைகள்கெட்ட ஒழுக்கத்தின் அடையாளங்கள்.

(4) அந்நியர்கள், நம் உபாத்தியாயர் நம்தாய் தகப்பஞர், நம்முடைய சகோதரர், சகோதரிகள், நம்முடைய கூட்டாளிகள், இன்னம் மற்றவர்கள் ஆகிய இப்பேர்க்கொத்தவர்களிடம் மரியாதையாகப் பேசவேண்டும். தயவு அல்லது பிரீதியைத் தெரிவிக்கிற அடியேன்(அல்லது) சிறுவன் என்கிற பதம் சேர்த்தால் நாம் கேட்டுக்கொள்ளுகிற அனேக விண்ணப்பங்கள் அயலார்க்கு இனிமையாகத் தோன்றும்.

அப்பதம் சேர்க்காதிருந்தால், அவ்விண்ணப்பங்களே கடுஞ் சொற்களாகத் தோன்றும். அதே மாதிரிதான் வந்தனம், ஐயா, என்று சொல்லுகிறதும். அவ்வார்த்தைகளை எந்நெந்த காலங்களில் உபயோகிக்க வேண்டுமென்று நம்மவரில் எல்லோருக்கும் தெரியும், நம் உபாத்தியாயரையும், இன்னம் மற்ற மேலானவர்களையும் நாம் தெருவிலே சந்தித்தால் அவர்களுக்கு வந்தனம் செய்யவேண்டும்.

(5) தளர்ச்சி யடைந்தவர்கள், திக்கற்றவர்கள், விருத்தாப்பியர், சிறு குழந்தைகள், ஆகிய இவர்களிடத்தில் பட்சமாயிருக்க வேண்டும், கால் பாதையின் வழியாய் நடந்துபோகையில் நம்மை விட வயதுமுதிர்ந்தவர்கள் நமக்கு எதிரேவந்தால் எப்பொழுதும்நாம் ஒதுங்கிப்போக வேண்டும், நாம் இன்னும் வயது வந்த மனிதர்களாகவும், ஸ்திரீகளாகவும் ஆய்விட வில்லை. பெரிய தர்ம கைங்கரியங்கள் செய்வதற்கு நாம் சக்தியற்றவர்களாயிருக்கிறேம், ஆனபோதிலும் நம்மவரில் ஒவ்வொருவரும் பிரீதி பொருந்திய சிறு சிறுகாரியங்கள் செய்யக்கூடும், இந்தசிறு உபகாரங்கள் சேர்ந்து தான் வாழ்நாட்களை சோபிக்கச் செய்கிறது.

(6) ஒரு காரியத்தைச் சொன்னவுடனேகீழ்ப்படிந்து செய்யவேண்டும். ஒரு காரியத்தைச் செய்வதற்கு இரண்டு தரம் சொல்லும்படியாய் நடந்து கொள்ளக்கூடாது.

(7) ஒருவருடைய மனதையும் நோவப்பண்ணக்கூடாது மற்றவர்களுடைய சுகங்களைப் பற்றி நினைக்கிறவனும், பிரீதியாயும், தன்னிச்சை யற்றவனுமாயிருக்கிறவனும் தான் குலமகன்.

(8) அயலார் நம்மிடத்திலெப்படி நடந்துகொள்ளவேணுமென்று நமக்கு இச்சையிருக்கிறதோ, அதே மாதிரியாக நாமும் அவர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டும் இதுதான் வாழ்நாட்களுக்கு ஏற்றவிதி.

(9) யாராவது நம்மை சகாயம் கேட்டு, அந்த சகாயத்தை நம்மால் செய்வதற்கு முடியாவிட்டால், செய்ய முடியாதென்று மிருதுவான பேச்சுகளால் சொல்லி, கூடுமானால் நம் காரணத்தையும் சொல்லிவிடலாம். மிருதுவான வார்த்தைகள் கடுமையானவும் முரட்டுத்தனமுள்ள சுபாவத்தையும், அதிக வேகமும் படபடப்புமுள்ள தன்மையும், சரியானவழிக்கு வரச்செய்யும், "ஒருமிருதுவான மறுமொழி, கோபத்தையும் நீக்கி விடுகிறது" என்று பழமொழி யிருக்கிறது.

(10) மற்றொருவன் பேசிக் கொண்டிருக்கையில் நாமும் பேசக்கூடாது, அந்த மந்திரிசெய்வது, நன்றாயறிந்த நல்லொழுக்கத்தின் விதிக்கு விரோதமாகநடக்கிற அதிக கெட்டபிழை.

(11) யாராவது எழுதிக் கொண்டாவது,படித்துக்கொண்டாவது இருக்கையில் அவன் பின்னால் நின்று அவன் தோளின் வழியாய்ப்பார்க்கக்கூடாது. நாம் வேணுமென்றல்லாமல் செய்தபோதிலும் மூடன் என்று தோன்றப் படுவோம், ஏனென்றால் மற்றவர்கள் காரியங்களைத் திருட்டுத்தனமாகப் புகுந்துபார்த்தல் மூடத்தனம்.

(12) ஒவ்வொன்றையும் ஏற்றகாலங்களில் செய்யவேண்டும்.எவன் குறித்த காலத்தில் ஒரு காரியத்தைச் செய்யாதிருக்கிறானோ அவன் தன் காலத்தை வீண்போக்குவதோடுகூட மற்றவர்கள் நேரத்தையும் வீண் போகச் செய்கிறான். அதிக அற்பமான காரியத்தைக் கூட நன்றாகச் செய்ய வேண்டியது. ஏனென்றால் செய்ய வேணுமென்று ஏற்பட்டிருப்பதை நன்றாகச் செய்தல் அதிக நலம்.

(13) நம் உடுப்புகளை ஒழுங்காகவும் அழுக்கில்லாமலும் வைத்துக் கொள்ள வேண்டும். நம் சொந்த உடுப்பைப்பற்றியாவது அல்லது மற்றவர்களுடையதைப் பற்றியாவது நாம் பேசக்கூடாது யாராவது ஒரு பையன், அல்லது. பெண் ஏழைத்தனமான உடுப்பு தரித்துக் கொண்டிருப்பதை ஒருவேளை நாம் பார்க்கலாம் ஆனால் அம்மாதிரி தரித்துக் கொண்டிருந்தால் தான் என்ன? பருத்திநூலினால் நெய்த உடுப்பும், பட்டினால் நெய்த உடுப்பவ்வளவு சுத்தமாய் இருக்கட்டும்

(14) தலைமயிர், முகம்,கைகள், நகங்கள்,உடல், பாதம், ஆகியதலை முதல் கால் வரைக்கும் நாம் சரீர சுத்தமாயிருக்க வேண்டும். அதுதேக சௌக்கியத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் அத்தியாவசியம்.

(15) மகிழ்ச்சியுடனும், திருப்தியடைந்தவர்களாயுமிருக்க வேண்டும். திருப்தியடைந்திருக்கும் தன்மை திரவியத்தைப்பார்க்கிலும்அதிக மேலானது. மற்றவர்களைப்பார்த்து பொறாமை கொள்ளக் கூடாது.

(16) அயலார் சொத்தின் மேல் இச்சைவைக்கக்கூடாது, நம் உடமை ஆஸ்தியைப்பற்றி எவ்வளவு ஜாக்கிரதையா யிருப்போமோ, அப்படியே அயலாரின் உடமையைப்பற்றியும் ஜாக்கிரதை வேண்டும்.

(17) நம்முடைய மரியாதை, குணத்தையும், நல்லொழுக்கங்களையும், வீட்டுக்கு வெளியிலே தான் உபயோகிக்க வேண்டுமென்றிருக்கக்கூடாது. நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொள்வதற்கும், உபந்நியாசிப்பதற்கும், அதிகமேலான இடம் நம்முடைய வீடுதான.

(18) சரியான காரியங்களை அவை சரியாயிருக்கிறதற் காகவே செய்யவேண்டும்-நம் கடமைகளை செய்ததற்காக நாம் வெகுமானத்தை எதிர்பார்க்கக்கூடாது,அதுவேவெகுமானம், கடவுளைநேசிக்கவேண்டும்.

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்

முயற்சியுடையார், இகழ்ச்சி அடையார், என்பது மேலான நீதிச் சொல். இதை முதியோரானாலும், இளையோரானாலும், செல்வரானாலும் வறியரானாலும், எவர்கள் அனுசரித்து நடக்கிறார்களோ, அவர்களுக்கு அனுகூலம் உண்டாகும். சில பிள்ளைகள் கணக்குப் பார்க்கும் பொழுது தொகை பிசகினால், அது கடினமாய் இருக்கின்றதென்று நினைத்து, திரும்பவும் பாராமல் விட்டு விடுவார்கள். வேறு சிலர் தங்கள் பாடத்தைஎளிதில் தெரிந்து கொள்ளாவிட்டால், விசனப்பட்டுப் புஸ்தகத்தை வைத்து விடுவார்கள். இப்படிச் செய்வது புத்திஹீனம். முதல்முறை கடினமாய்த் தோன்றுகிற கணக்கைஅதிக கருத்துடன் திரும்பப்பார்த்தால், எளிதாகத் தெரியவரும். ஒரு முறையில் அர்த்தமாகாத பாடத்தை இன்னும் அழுத்தமாய்ப்படித்தால், இலகுவாய் அர்த்தமாகும். இவை எல்லாம் முயன்றோர்க்குத்தெரியும். முதலில் அமெரிக்க தேசத்தைக் கண்டவன் கொலம்பஸ் என்பவன் அவன் யாத்திரை போனபொழுது, வழியில் நேரிட்ட தடைகள் அனேகம். அவன் நூதனமாய் ஒரு தேசத்தைக்காண விரும்பி, கப்பல் செலுத்திக்கொண்டு போனான். அவனுடைய விருப்பத்தின்படி அது அநுகூலம் ஆகவில்லை. நாளுக்கு நாள் பல சங்கடங்கள் நேரிட்டன- கடைசியில் கப்பற்காரர்கள் மனம் சலித்தவர்களாய், இனி நமது தேசத்திற்குத் திரும்புவதே நலமென்று கொலம்பஸுக்குச் சொல்ல, இவன் அவர்கள் பேச்சைக்கேளாமல், இன்னும்— கொஞ்சத்தூரம் போய்ப் பார்க்கலாம் என்றான். அவர்கள் வெறுப்புற்று, அவனைச் சமுத்திரத்தில் தள்ளிவிடுவோமென்று பயமுறுத்தினார்கள். அவனோ சிறிதும் சலியாமல் கப்பலைச் செலுத்திக் கொண்டு போய், கடைசியில் அமெரிக்க தேசத்தைக்கண்டு,சந்தோஷித்து,இவ்வாறு தன்விடா முயற்சியால் உண்டான பயனை அனுபவித்தான். முயற்சியுடையோர் குறைவடையார் என்பது நன்முயற்சியைக் குறித்துச்சொல்லப்படும். தகாதமுயற்சி செய்கிறவர்கள் தாழ்ச்சி அடைவார்கள். அதற்குத் திருஷ்டாந்தம்.—

ஒரு சிறுவன் 10-அடி தூரத்தைத் தாண்டும்படி பாய்ந்து, பத்தடிக்குள்ளேயே விழுந்தான் கால் சுளுக்கிற்று. அப்பொழுது அவன் " என்னைப் போலப் பைத்தியக்காரர் இல்லை. இந்தத்தூரத்தைத் தாண்டஎன்னால், ஆகாதா ? நல்லது இன்னும் ஒரு முறைபார்ப்பேன்" என்று சொல்லிப் பாய்ந்து மறுதரமும் அதற்குள்ளேயே விழுந்தான் முன்னிலும் அதிகமாய் கால் சுளுக்கிற்று. பின்பு அவன் என் கால் ஒடிந்தாலும், நான் இந்தத்தூரத்தைத் தாண்டாமல் விடுகிறதில்லையென்று, நிர்ணயித்துப் பாய்ந்த பொழுது, அவன் கால் ஒடிந்தது. ஆயுசுபரியந்தம் நொண்டியாயிருந்தான்.

ஆகையால் எந்த முயற்சியையும் செய்யுமுன் அது நன்முயற்சியா, அல்லவாவென்று விசாரித்து அறிந்து, நன் முயற்சியானால் அதைச்செய்வதும் தீய முயற்சியானால் விலக்குவதுமே புத்தி. நன் முயற்சி செய்கிறவர்கள் உடனே அனுகூலம் காணாதிருந்தாலும், மனம்சலித்து விட்டுவிடாமல், 'முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்' என்னும் நீதிச் சொல்லை நினைத்து, அதிக ஊக்கத்துடன் திரும்பவும் அம்முயற்சிசெய்வது கடன்.

இ. பட்டாபிராமையர்.

இங்கிலீஷ் தமிழ்

வைத்திய சிகாமணி

இந்நெடிய உலகத்தில் எல்லாப் பிறவிகளிலும் மானுடப்பிறவி கிடைத்தற்கரிய மேலான பிறவியெனினும் பல்பிணிகளும் வந்தடையும் பெரும்பொக்கிஷமாயிருக்கிறது. ஆகவே நாம்சுகமாய் வாழவேண்டுமானால் "நோய்க்கிடங்கொடேல்" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து நம்முடைய தேகத்தை நோய் அணுகாவண்ணம் பாதுகாத்துக் கொள்ளவும் சுகாதார வீனத்தினால் நோய்அணுகிவிட்டால் அதை இலகுவில் ஒழிக்கவும் முயலவேண்டும். இன்றி யமையாத உதவியென நம் முன்னோர்அரிய பெரியபல வைத்திய நூல்களை ஏற்படுத்தி யிருந்தார்கள் ஆனாலும் சில ரொழிந்தபலர் காலக்கிரமத்தில் அவைகளின்பலனை அனுபவிப்பதில் சோம்பலின்வாய்ப்பட்டு அநுபவியா தொழிந்தனர்.

மேல்நாட்டு நாகரீகம் குடிபுகுந்த இக்காலத்தில் ஆங்கிலவைத்திய சிகிச்சையே பெரும்பாலும் பிரபலம் அடைந்தும் அடைந்து கொண்டும் வருகிறதாகையால் சிகிச்சையளவில் இருந்த மேற்படி ஆங்கிலேய வயித்தியத்தை புத்தகரூபமாக வெளியாக்க பலநாட்களாகப் பிரயாசை யெடுத்து நமது இந்தியாதேசத்துக்குத் தாய்வீடாகிய சீர்மை என்னும் லண்டன் பட்டணத்தில் அச்சிட்டிருந்த பாக்கட்சைஸ் பிரிஸ்கிரிப்ஷன் புஸ்தகத்தை தமிழ்ப்பாஷையில் இப்போது மொழி பெயர்க்கப்பட்டது.

இவ்வரிய புஸ்தகத்தில் ஆயிரக்கணக்கான வியாதிகளுக்கு ஒவ்வொரு வியாதிக்கும் பலவித சிகிச்சைமுறைகள் அடங்கியதாய் ஆயிரமுறைகள் சேர்க்கப்பட்டிருக்கிறதுமன்றி இந்து ஆயுர்வேத அபூர்வ முறைகள் பலவும் தனியாய் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இப்புஸ்தகம் இங்லீஷ்படித்தவர்களுக்கும் தமிழ்மாத்திரம் வாசித்தவர்களுக்கும் ஆக இரு வகுப்பாருக்கும் உபயோகப்படவேண்டுமென்று யோசித்து ஒவ்வொருமுறையும் இங்லீஷில் ஒருபக்கத்திலும் அதற்கு நேர்பக்கத்தில் தமிழிலுமாக கைம்முறைகள் ஒவ்வொன்றையும் எந்த வைத்தியர்கள் கையாண்டிருந்து உண்மையானதென்று வெளிவிட்டிருந்தனரோ அவரவர்கள் பெயரை இருபாஷைகளிலும் அந்தந்த முறைகளின் கீழேயேசேர்த்து உயர்ந்த கிளேஸ் 20-பவுன் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்தில் அச்சிட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 3—0—0

மானேஜர், 'கலாசிந்தாமணி, மயிலாப்பூர் மதராஸ்.